சமாஜ வைர விழா வெளியீடு

சிவஞான போதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல

120 காரணங்கள்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

உ

சிவமயம்

சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல

120 காரணங்கள்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்,

பி.ஏ., பி.எல். அவர்கள் எழுதியது

சமாஜ வைர விழா வெளியீடு

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை – 4

(உரிமையுடையது) 1965 (விலை 50 காசு

நூற்குறிப்பு

தலைப்பு	:	**சிவஞான போதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல**
ஆசிரியர்	:	**திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்**
முதல் பதிப்பு	:	1965
இரண்டாம் பதிப்பு	:	பிரமாதி, பங்குனி 2000
உரிமை	:	சைவ சித்தாந்தப் பெருமன்றம்
தாள்	:	56 gsm
அளவு	:	5" x 7"
எழுத்து	:	11 point
பக்கங்கள்	:	24+36
படிகள்	:	1000
சலுகை விலை	:	ரூ. 7/–
வெளியிட்டோர்	:	**சைவ சித்தாந்தப் பெருமன்றம்** 4 (முதல் மாடி) வேங்கடேச அக்கிரகாரம் சாலை மயிலை, சென்னை – 600 004. போன் : 4935109
அச்சிட்டோர்	:	**ஸ்ரீ கைலாஷ் பிரிண்டர்ஸ்,** 32, பங்காரு நாயக்கன் தெரு, சென்னை – 600 002. போன் : 8532906

திருச்சிற்றம்பலம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

'ஆரூர் மூலட்டத்தெம் அடிகள் போற்றி'

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

நூலகம்

திருநெறிக்காவலர் எஸ். தியாகராசன்
தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம்

தென் தமிழ் நாட்டுச் சிவநெறியெனப் பெறும் சைவ சித்தாந்தப் பெருநெறியின் முதன்மை மூல நன்னூல் 'சிவஞான போதம்'.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் வாழ்ந்த அருளாளர் மெய்கண்ட தேவநாயனாரால் அருளிச் செய்யப் பெற்ற நூல் சிவஞானபோதம்.

வான்வழிச் செலவை மேற்கொண்ட பரஞ்சோதி மகாமுனிவரின் வழிவந்த உபதேசமும்; திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருமுன் நின்று பெற்ற அருளனுபவப் பேறும்; இணைந்து நின்ற நிலையில் மெய்கண்டாரின் திருவுள்ளத் தெழுந்த ஞானப் பிரகாசமே 'சிவஞான போதம்' என வெளிப்பட்டது என்பது வரலாற்று வாய்மை.

எனினும், மெய்கண்டாரின் சிவஞானபோதம் வடமொழியிலிருந்து மெய்கண்டாரால் தமிழில் பெயர்த்தளிக்கப் பெற்ற மொழிபெயர்ப்பு நூல் என்ற கொள்கையை ஏற்றுப் போற்றும் சைவசித்தாந்த பரம்பரையினர் ஒருவகை.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் செயலாளராகவும், 'சித்தாந்தம்' இதழின் ஆசிரியராகவும், 'பெருமன்றப் பதிப்பு' என்ற பெயர் சொன்னாலே அதன் தரம் இனிது விளங்கும் என்ற சிறப்புப் பெயரைத் தம் ஆராய்ச்சித் திறனாலும் அயரா உழைப்பாலும் பெற்றுத் தந்த பேறாளராகவும் விளங்கியவர் திரு. ம.பா. அவர்கள்.

'சிவஞான போதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல' என்பதை 120 காரணங்கள் காட்டி, திரு ம.பா. அவர்கள் நிலை நாட்டியுள்ளார்கள். அவை அப்போது சித்தாந்தம் இதழில் வெளிவந்தன. மீளவும் அவைகளை நூலாக அமைத்து அந்நூல் 1965ல் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் வைர விழா (மணி விழா) வெளியீடாக, அப்போது செயலாளராக இருந்த சைவத்திருவாளர் கொ. நீ. சிங்காரவேலு அவர்களால் வெளியிடப் பெற்றது.

இரண்டாம் பதிப்பாக இப்போது அந்நூல் வெளி வருகிறது.

காலத்தின் தேவையையும் கருத்தின் வளத்தையும், விரும்பிக் கேட்கும் சைவப் பெருமக்களின் நல்லார்வத்தையும் மூலதனமாகக் கொண்டு, செயற்குழு செய்த முடிவின் வண்ணம் இந்நூல் வெளியிடப் பெறுகிறது.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்துச் செயற்குழு உறுப்பினர்களுக்கும் இதனை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ கைலாஷ் பிரிண்டர்ஸ் உரிமையாளர் சிவ. வி.ஆர். மயூரப்பிரியா அவர்களுக்கும் பெருமன்றத்தின் நன்றி உரியதாகுக.

சைவப் பெருமக்கள் வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுகின்றேன்.

உ

திருச்சிற்றம்பலம்

அணிந்துரை

சித்தாந்த சரபம்

பேராசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி

ஆசிரியர் : 'சித்தாந்தம்'

பொய் காட்டிப் பொய்யகற்றிப் போதானந்தப் பொருளாம் மெய் காட்டும் மெய்கண்டான் என்றும் பொய்காட்டா மெய்யா என்றும் தம் மாணாக்கரால் அளவையியல் அடிப்படையில் நின்றும்; மெய்ப் பொருளியல் அடிப்படையில் உணர்ந்தும்; அருளிய லனுபவப் பேற்றின் அடிப்படையில் திளைத்தும் உலகத்தவர்க்கு விரிவுரை செய்து காட்டப் பெற்ற புறச்சந்தான முதற்குரவரால் வெளிப்படுத்தப் பெற்ற ஞான நூலே சிவஞான போதம்.

சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு நூலே என்றும் தமிழ் முதல் நூலே என்னும் இரு அணிகள் தனித்தனியே நின்று தத்தம் முத்திரை பதித்த அகவியற் சான்றுகளை வலிந்தும் வலித்தும் எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றன என்பதைச் சைவ சித்தாந்த வரலாற்றில் காண முடிகிறது.

வாதம் சுவையானதா பொருள் பொதிந்ததா சைவப் பெருநெறியின் வளர்ச்சிக்குத் தேவையானதா சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்தாக நின்று விளைவிப்பதா என்ற வினாக்கள் ஒருபுறம் இருக்கட்டும்.

மொழிபெயர்ப்பு நூல்தானே என்பதால் சிவ ஞானபோதமும்; மொழிபெயர்ப்பு நூல் என்ற சொன்ன சிவஞான முனிவரால் எழுதப் பெற்ற பாடியம் என்பதால் மாபாடியமும் சைவப் பெருமக்களாலேயே படிக்கப் பெறாமல் ஒதுக்கப் பெற்று விட்டன என்பதைச் சைவ உலகம் உணர்ந்து தெளிதல் வேண்டும்.

[stamp]

'சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே' என்ற அடிப்படையில் எழுந்த இந்நூல் சைவப் பெருமக்களுக்குக் கண்ணெனத் திகழும் சாத்திர, தோத்திர நூல்களிற் போற்றப் பெறும் ஆய்வியல் நிலைகளைப் புலப்படுத்தி நூல் வெளியிடு செய்தும் 'தரமானபதிப்புக்கோர் ம.பா' என்ற தரமான புகழைப் பெற்றும் திகழ்ந்த 'ம.பா' அவர்களால் எழுதப் பெற்றது.

சைவ சித்தாந்த சாத்திர உலகில் தனக்கென ஓர் தனிமுத்திரையைப் பதிப்பித்த ஆய்வாளர் திரு. க. வச்சிர வேலு முதலியார் அவர்கள் இந்நூல் முதற்பதிப்பாக வெளிவரும்போது அரிய முன்னுரை ஒன்றை வழங்கியுள்ளார்கள்.

சிவத்திரு நல் முருகேச முதலியார் அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு முன்னுரை வழங்கியுள்ளார்கள்.

அழகிய பதிப்புரை ஒன்றைப் பெருமன்றத்தின் செயலாளராக அப்போதிருந்த சிவத்திரு கொ. நீ. சிங்கர வேலு அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

இம்மூவரும் இப்போது பூதவுடல் நீத்துப் புகழுடம்பு பெற்று எம்பிரான் திருவடியில் இணைந்து இன்புறுபவர்கள்.

இந்நூலை உருவாக்கியவரின் உள்ளத்தில் மலர்ந்து உண்மை என நிற்கும் இந்நூலை மக்கள் படித்து, நடுநிலை பிறழாமல் ஓர்ந்து உணர்ந்து தெளிவார்களாக.

உ

சிவமயம்

பதிப்புரை

"சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே, மொழி பெயர்ப்பல்ல" என்னும் இந்நூல் முதன்முதல் 1949-ஆம் ஆண்டு மே மாத 'சித்தாந்த' இதழில் வெளிவந்தது. பின்னர் இது தனி நூல் வடிவில் அச்சிடப்பெற்றது. இதை இயற்றியவர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், B.A.,B.L. அவர்கள். இவர் 8-3-1896 அன்று தோன்றி 14-3-1958 அன்று மறைந்தவர். இருபத்திரண்டு ஆண்டுகள் சைவ சித்தாந்த மகா சமாஜச் செயலாளராகவும், பன்னிரெண்டு ஆண்டுகள் 'சித்தாந்த'த்தின் ஆசிரியராகவும் சில ஆண்டுகள் சமாஜ ஆண்டு விழாத் தலைவராகவும் தொண்டாற்றியவர். அநேக நூல்களைத் திறமையாகப் பதிப்பித்து, சமாஜ அடக்கவிலை வெளியீடுகளாக வெளியிட்டுச் சமாஜத்திற்குப் புகழைத் தேடித்தந்தவர்.

சமீபத்தில் ஒரு சரித்திரப் பேராசிரியர் தம் நூலில், மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் இரௌரவ ஆகமத்தில் காணும் சமஸ்கிருத சூத்திரங்களின் மொழி பெயர்ப்பு என்று தீர்ந்த முடிவுபோலக் கூறியிருந்தார். மற்றும், இதுபோன்ற சில தவறான கருத்துக்களையும் வெளியிட்டிருந்தார். இக் கருத்துக்களைக் கண்டித்து 28-12-64-ல் பேரூரில் நடந்த சைவ சித்தாந்த மகா சமாஜக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. இந் நிகழ்ச்சியையொட்டி பலர் திரு. ம. பா. எழுதிய இந்நூலின் பிரதிகளை வாங்க விழைந்தனர். இந்நூல்

அச்சில் இல்லாததால், இதை இரண்டாம் பதிப்பாக அச்சிடுவது என்று சமாஜச் செயற்குழு தீர்மானித்தது.

சைவ சித்தாந்தம், தமிழர் அறிவில், பண்பாட்டில், அனுபவத்தில் மலர்ந்த சமயம் என்பது எல்லோராலும் ஒப்பமுடிந்த உண்மை. இது ரெவரண்ட் டாக்டர் G. U. போப், ரெவரண்ட் W. கௌடீ போன்ற பல மேனாட்டு அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பெற்றது. ஆகையால், சைவ சித்தாந்தத்தின் தலைசிறந்த நூல், தமிழர் தாய் மொழியிலேயே தோன்றியிருப்பது இயற்கை. இதற்குப் பல பொருத்தமான காரணங்களைத் திரு. ம. பா. அவர்கள் இந்நூலில் கூறியிருக்கிறார்; அவை மறுக்கலாகாதவை.

எங்கள் வேண்டுகோளுக்கிணங்க, இந்நூலுக்குச் சமாஜத் துணைத்தலைவர் திரு. இராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி.ஏ., அவர்களும், காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. கா. வஜ்ஜிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி. அவர்களும், முறையே ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை செறிந்த முன்னுரைகள் வழங்கியுள்ளனர். அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்த முருகன் அச்சகத்தாருக்கும், இந்நூற் படியை நன்முறையில் திருத்தி உதவிய வித்துவான் - அம்பை சங்கரனாருக்கும் சமாஜத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல், உண்மை காண விரும்புவோர் யாவருக்கும், பயன் தரும் என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம் :

சென்னை
23-10-65

கோ. நீ. சிங்காரவேலு,
செயலாளர்,
சைவ சித்தாந்த மகா சமாஜம்.

PREFACE

An enquiry whether the *Sivajnana bodha* sutras of Sri Meikantadeva is an original work of his in Tamil or whether it is a translation of a portion in the Pacavimocana patala of *Raurava Agama* has been necessary, not so much to enhance the prestige of the celebrated author or of the Tamil language, as to set clear the pure stream of the Siddhanta thought of the South. The debate, for example, whether the *Bhagavadgita* is a later interpolation in the Mahabharata text does not detract from the merit of the work but it indubitably leads to the conclusion that it is later than the movement represented by the Upanisads and that it united the different currents of philosophic thought into a simple unity.* Opinion is not lacking that it might have originally been a Samkhya yoga treatise/adjusted to the Vedanta tradition by some scholiasts. The author of the text is unknown but it is represented as the words of Bhagavan Krishna although the original Mahabharata must have contained only a few slokas as to what He taught to Arjuna on the battlefield.

The position in regard to the Sivajnanabodha sutras is not however exactly similar. The sutras were believed to be part of the *Raurava Agama* but no redaction of that Agama containing the sutras has so far been available. Even the latest text† of the Agama edited by the Institut Francais D'Indologie, Pondichery, after consulting not less than six manus-

---

* S. Radhakrishnan, The Bhagavadgita, George Allen & Unwin Ltd., pp. 11—15.

† Rauravagama Ed. N. R. Bhatt, Introduction by Jean Filliozatt, Institut Francais D' Inologie, Pondicherry (1961).

cripts and published in 1961 does not contain the sutras. Not having been found in any available text of the Agama, the Siddhanta scholar, Maraimalai Adigal was obliged to call the belief that the sutras were part of the Agama as similar to the belief in hare's horn. The crucial point is when exactly the present existing Samskrit version made its appearance in any other reputable work. No research has so far been made on this aspect, but it is necessary to do so and ascertain whether there are any other variations of this text. It is believed that it was Madurai Sivaprakasar, one of the commentators of *Sivaprakasam* of Umapathi Sivacarya in circa AD 1487, who wrote that Meikantadeva wrote the twelve Sutras based* on the twelve mulagrantas taught by Srikanta Paramesvara (Lord Siva) to Nandideva in the Agamas. No reference is however made to the Raurava Agama. Later Sri Sivagrayogi (circa 1565), the author of the Bhasya† on *Sivajnanabodham*, wrote that the sutras were part of that Agama in anustup metre. It is believed that Sivagrayogi must have translated the Tamil sutras of Meikantadeva into Sanskirt as a very extensive commentary in that language without the sutra text in the same language would be otiose. So he appended the Samskrit sutras to his Bhasya. It would be too much to father the authorship on him of the sutras believed to have been in Raurava Agama. But the fact to be remembered is that this Samskrit text in its contents is more inclined to Sivadvaita and Sivasamavada doctrines than to the Suddhadvaita of Sri Meikantadeva. It is again suggested that the emendation might have been by Sivagrayogi himself to suit his line of thinking. It is un-worthy to impute such

* Siddhanta Sastram, Pathinangu, Murainum Uraiyum (Pub.) Saiva Siddhanta Mahasamajam 2nd Edn. (1940) pp. 709-10

† Sivagra Bhasya, (Pub.) Suryanarkoil Atheenam (1920)

a motive as Sivagrayogi himself has a commentary on the *Sivajnana Siddhiyar* of Arulnandi Sivacarya based strictly on Sri Meikantadeva's Tamil sutras.

The enigma is not so much due to Sivagrayogi's asseveration as to the fact that Sivajnana Swami (d. 1785) the celebrated author of *Dravida mapadiyam*, and a close follower of Meikantadeva has subscribed to the view* that the original of the Tamil sutras were those in *Raurava Agama*. Sivajnana Swami's time was nearly 200 years later than that of Sivagrayogi and a careful student of the latter's works although he differed from him and refuted Sivadavaita and Sivasamavada doctrines. It is not clear to which Samskrit sutras he referred to. Nor has he referred to the doctrinal differences between the Samskrit sutras and the Tamil sutras. It is a moot point whether the Samskirt text he was referring to was different from that we have now today and the one believed to be referred to by Sivagrayogi. It is Sivajnana Swami that says that the Tamil work is a translation and that Meikantadeva has added the vartika. Neither Madurai Sivaprakasar, nor Sivagrayogi, has introduced the element of translation (mozhi peyarpu) although all believed that the doctrinal tenets known as Sivagnanabodham were found in *Raurava Agama*. Sivagnana Swami is however definite in considering that Meikantadeva's work arose to clear up the variations and contradictions in the Agamas. This is borne out by the twelfth verse in the Sanskirt text itself which has a final exhortation, "evam vidyat Sivagnanabodha Saivarta nirnayam" (ie.) understand all this from Sivagnanabodha which explicates the meaning of Saiva Philosophy). The payiram preceeding the

* Sivajnanamapadiyam, (Pub.) Saiva Siddanta Mahasamajam (1936) pp. 15—16.

Tamil sutras also says that Meikantadeva has expounded what Srikantesvara revealed to Sanatkumara and others through Nandikesa. If the current extant Samskirt text was the original Agamic part, Meikantadeva's work, it can be easily concluded, was definitely *not* a translation as there are fundamental doctrinal variations.

Basing the statement of such learned scholars like Madurai Sivaprakasar and Sivajnana Swami, modern scholars till a few years ago had assumed that Meikantadeva's sutras were a translation and not an original work. The late J.M. Nallasami Pllai (d. 1928), the pioneer modern researcher of Siddhanta works wrote* in 1913, "And my own friends like the late Professor Sundaram Pillai, Pandit D. Savariroyan, M.R.A.S, Virudai Sivagnana Yogigal, Mr. T. Ponnambalam Pllai, M.R.A.S. have been trying to impress upon me the like notion and they have gone so far as to say that the original Sanskirt sutras forming the text of Sivagnana bodha should have been translated from the Tamil of Meykandadeva and not *vice versa*" The view that the Tamil sutras were not a translation was further strengthened by scholars like Maraimalai Adigal, K. Subramaniam Pillai and Thiru V. Kalyanasundara Mudaliar in their writings. Apart from orthodox scholars, even a critical scholar like J. M. Nallasami Pillai held fast to the view that the sutras were part of *Raurava Agama.* Thiru V. K. records † that in the Saiva Siddhanta Samajam Conference held at Vellore in 1913, when he posed the question rhetorically whether if the sutras were part

* Sivajnana Siddhiyar, Tr J. M. Nallasami Pillai (Meykandan Press, 1913) Introduction pp. VII—VIII

† Thiru V. Kalyanasundaranar Vazhkkai Kurippugal (Sadhu Press, Madras 1944) p. 602.

of the Raurava Agama, where was the necessity for Srikanta Parameswara to teach the *Sivagnana botham* separately according to the traditional account, as all Agamas were already taught by Siva to him; did Siva forget this jnana pada of the Raurava or did Nandikesa go to sleep?" there was thunderous applause from the audience. J.M.N. vehemently remonstrated, "No, no, it is all wrong." I have come across an article written in 1919 by Sabharatna Mudaliyar* of Jaffna wherein he uses a rather unusual argument in support of his contention that the Tamil sutras had a Samskirt original. His contention was that the beginning and concluding verses of the payiram attached to Meikantadeva's sutras refer to a work known as Sivagnanabodham given to Nandikesa, but as there is no earlier work going by the same name in Tamil ever heard of though not surviving (as for example *Agasthiyam*), it is reasonable to conclude that the original was Samskirt. This is rather a tenuous argument. It is believed that some of the Agamas were in local languages also and secondly it is not certain whether the payiram stanzas were not attached subsequently.

In the result, there have accumulated in recent years enough research materials on the pros and cons of the question whether Meikantadeva's sutras were an original work in Tamil. The late M. Balasubramania Mudaliar, though at first he accepted the statement of so great a scholar like Sivajnana Swami, made further researches and consolidated all the arguments in favour of the Tamil genesis of the work and also the refutations of the arguments to

† Article in "Saivam" Madras. vol 5. No 8 (Aug. 1919) pp. 138—151.

Divine grace as the account of his life amply bears out.

I think that nowhere in the history of Indian Philosophy there has been such a logical and crystal clear statement of the reality of God, Man and the World, the nature of their relation and means and nature of mukti. If the republication of this Monograph would help Saiva scholarship to a further understanding of the Samskirt Agamas and this crown jewel of Meikantadeva and help other schools of thought to a truer understanding of Saiva Siddhanta by a study of the Tamil work, it would have achieved a very useful purpose. Neither Tamil nor Meikantadeva requires anybody's championship and the consideration is not one of language which would be narrow and useless but one of a truer understanding of Saiva Siddhanta as embodied in the Tamil Sutras which have been rendered into English by various scholars, both Indian and Western, and deserve to be translated like the Kural into many more languages of the world.

Salutations to the Flowery feet of Sri Meikantadeva!

Madras
15th Sept. 1965

N. MURUGESA MUDALIAR

உ

முன்னுரை

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் தலைமைத்தானம் பெறும் "சிவஞான போதம்" என்னும் ஞானநூல் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருவெண்ணெய் நல்லூரில் மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையவராய் எழுந்தருளியிருந்த மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பெற்றது. பிரம சூத்திரங்களை உபநிடத ஆராய்ச்சி நூலாக (மீமாஞ்சையாக)க் கொள்ளுதல் போல இது சைவ சித்தாந்த மீமாஞ்சை எனக் கொள்ளப்படுகிறது. ஆயினும், முன்னையது உபநிடதங்களில்வரும் சொற்களின் ஆராய்ச்சியைமேற்கொண்டு மிக விரிந்து பல தலைப்பட்ட மதங்களுக்கும் இடங்கொடுத்து நிற்பது. இஃது அங்ஙனம் அன்றி உபநிடதங்களின் கருத்தொழுங்கைத் தன்னுட் கொண்டு, கற்போர் உணர்வைப் பொருணிலைக்கண் உய்த்து, எளிதின் உண்மையனுபவத்தைப் பயப்பிப்பது. இக்காரணம் பற்றி இதனைப் பிரமாண நூல்கட்கெல்லாம் தலையாயதாகக் கொண்டார் இதற்கு வழிநூல் செய்த அருணந்திசிவனார்.

"மெய்கண்டான் நூல் – சென்னியிற் கொண்டு
சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றாம்"

என்பது அவர்தம் வாய்மொழி. இஃது உலகிற்றோன்றி நிலவும் சமய நூற்பொருள் முழுவதையும் அளத்தற்குத் துணைபுரிதலின், சார்பு நூல் இயற்றிய உமாபதி சிவனார் இதன்கண் உணர்த்தப்படும் பொருட் பெற்றியைப் "புகல் அளவைக்கு அளவாகி" எனச் சிறப்பித்தார்.

இந்நூலின் அருமை பெருமைகளை உணர்ந்த சான்றோர் ஒருவர் பலர்க்கும் இது பயன்படவேண்டும் என்னும் கருத்தால் இதனை வடமொழியில் அநுட்டிப்பு யாப்பில் பன்னிரண்டு சுலோகங்களாக மொழி பெயர்த்

தாராக, பிற்காலத்து வந்தோர் இந்நூற்குப் பிரமாணியங் கூறுதற் பொருட்டு அச்சுலோகங்களை இரௌரவ ஆகமத்துள்ளவை எனக் கூறிப் பற்பலவகையில் நூல் வரலாறு கூறலாயினர். அவ்வாறு கூற எழுந்த செய்யுட்கள் தாம் கூறும் விவரங்களில் சில பல வேறுபாடுடையனவாகவும், தம்மை இயற்றினோர் இன்னார் எனப் பெயர் அறியப்படாதனவாகவும் உள்ளன. மெய்கண்ட தேவர் தாம் கூறும் பொருணிலைக்குப் பிரமாணியம் உண்மையனுபவமாதல் ஒன்றே என்பாராய்த்,

> " தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
> எம்மை யுடைமை எமையிகழார் — தம்மை
> உணரார் உணரார் "

எனக் கூறியுள்ளார். தம் நூலுக்கு ஒரு முதனூல் இருந்ததாகவோ, கல்லால் நிழலமர் செல்வனும் பொல்லாப் பிள்ளையாருமன்றி வேறு ஓர் ஆசிரியர் தமக்கு உணர்த்தியதாகவோ குறிப்பிடவும் இல்லை. இவை போன்ற காரணங்கள் பற்றிச் "சிவஞான போதம்" தமிழ் முதனூலே எனவும் வடமொழிச் சுலோகங்கள் இதன் மொழிபெயர்ப்பே ஆம் எனவும் ஆராய்ச்சியில் வல்ல அறிஞர் பலர் பல ஆண்டுகளுக்கு முன் கூறலாயினர். இங்ஙனம் ஆய்ந்து துணிந்த அறிஞர்களுட் குறிப்பிடத் தக்கவர்கள் மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை என்போர் ஆவர். இவர்களுள் திரு. கா. சு. பிள்ளையவர்கள் மிக விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார்கள்.

இங்ஙனமாயினும், சித்தாந்த மாபாடியக் கருத்தாராகிய மாதவச் சிவஞான சுவாமிகள் தமது மாபாடியத்துள் நூல் வரலாறு கூறுமிடத்து மொழிபெயர்ப்பு என்னும் கொள்கையினை உடன்பட்டுக் கூறியிருத்தலின் சைவ நன்மக்களின் உள்ளத்தில் மேலே கூறிய ஆராய்ச்சியாளர் முடிபு அதிர்ச்சியையும் அருவருப்பையும் உண்டுபண்ணுவதாயிற்று. இந்நிலையில்,

> " எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு "

என்னும் பொதுமறைக் கேற்றபடி, காய்தல் உவத்தல் நீக்கி, உண்மையைக் கண்டறிதல் நம்மனோர் கடன். பல்காலும் முதற்கண் கேட்டு உண்மையென நம்பி மேற்கொண்டு வந்த கொள்கையை விடுவது அரிதாதல் பற்றி, தவறான கொள்கையைக் கைவிடுதற்கு உதவியாதற் பொருட்டு, திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் மேற்கூறிய ஆராய்ச்சியைச் சான்றுகளின் வன்மை மென்மை ஆய்வுமுறை பற்றி மிகப் பரவலாக ஆராய்ந்து "சிவஞான போதம் தமிழ் முதனூலே, மொழிபெயர்ப்பல்ல - நூற்றிருபது காரணங்கள்" என்னுந் தலைப்பில் 1949-ஆம் ஆண்டு ஒரு நூல் எழுதி வெளியிட்டனர். அது வாத முறை பற்றி மிக விரிவாக எழுதப்பட்ட நூலாகலின் பலர்க்கும் உண்மையைத் தெளிவிக்கும் என்பது பற்றி மீளப் பதிப்பிக்கப் படுகின்றது. இது யாவராலும் வரவேற்கப்படும் என நம்புகிறேன்.

"உயர்ந்த நூல்களெல்லாம் முதல்வன் வாக்கேயாம்" என்னும் அடிப்படை யுண்மையைப் பெரியோர்கள் பற்பல வகையில் தம் காலத்து உள்ள மக்கள் உள்ளங் கொள்ளுமாறு கவர்ச்சியாகக் கூறுவர். அக்கூற்றுக்களின் உள்ளீட்டை மட்டும் கொண்டு, விவரங்களைப் புனைந்துரையாகக் கொள்ளுதல் பாச அறிவுப் பிணிப்பினின்று விடுபடுதற்குத் துணைபுரியும்.

திருவாவடுதுறை ஆதீனத்து மூன்றாம் பட்டத் தெழுந்தருளியிருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள் தம் தசகாரியத்தில்,

> " முன்னவன் வடநூல் நோக்கி மொழிந்தனன் போதம் "

எனக் கூறியுள்ளார்கள். அவர்களுடைய மாணாக்கராகிய உலகுடை நாயனார் தமது கழிநெடிலில்,

“ மூந்தும் ஆகமத்தை அருட்டுறை யண்ணல்
மொழிபெயர்த் துரைத்தநூல் முதலா
முதல்வழி சார்பாம் மூன்றுநூற் கருத்தும் ”

எனக் கூறுகின்றார்.

சிவஞான சுவாமிகள் மொழிபெயர்ப்பு என்பதை உறுதியாகக் கொண்டதற்கு இவையே பெரிதும் காரணமாயிருத்தல் கூடும். நூல் வரலாறு எங்ஙனம் உரைக்கப்பட்ட போதிலும், மெய்கண்டதேவர் வாக்கை முதனூல் எனினும், அது பிரமாண நூல்களனைத்திற்கும் தலையாயது எனினும், மெய்கண்டதேவர் தமிழ்நாடு செய்த தவத்தானே திருவெண்ணெய் நல்லூரில் மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையாராய் எழுந்தருளி யிருந்தார் எனினும், வடமொழிச் சுலோகங்கள் தமிழ்ச் சூத்திரங்களோடு முரணும் இடங்களில் எல்லாம் தமிழ்நூற் பொருளுக்கேற்பச் சுலோகங்களுக்குத் தாற்பரியங் கொள்ள வேண்டும் எனினும் மாபாடியக்காரின் துணிபாக இருத்தல் கூர்ந்து நோக்கற்பாலன.

திரு. ம. பா. அவர்கள் எழுதியுள்ள காரணங்கள் தம் வலியைத் தாமே துலக்குவனவாகவும் தெளிவாகவும் இருத்தல் பற்றி அவற்றை மேலும் அரண் செய்யவோ விளக்கவோ புகுதல் மிகையாம்.

இங்கு நடைமுறையில் உள்ள சில உண்மைகள் சிந்தித்தற்கு உரியன. நமக்கு வடமொழியில் எழுந்துள்ள முதல் நூல்களும், தமிழில் எழுந்துள்ள முதனூல்களும் ஒப்பப் பிரமாணமேயாயினும் . தமிழ் நூல்கள் எல்லாராலும் ஒருபடித்தாகப் பொருள் உணரப்படுவனவாய்த் தெளியப்பட்டனவாயுள்ளன. வடநூல்களும் பெரும்பாலும் அவ்வியல்புள்ளவை எனக் கூறக்கூடுமாயினும் அவை பலரால் பலபடப் பொருள் விரித்துரைக்கப்பட்டும் பாடங்கள் மாற்றப்பட்டும் வருதலாலும், வன்மை மென்மை கொள்ளும் வகையில் பல வேறுபட்ட கருத்துக்கள் இருத்தலாலும் தமிழ் நூல்களால் கிடைக்கும் திடப்பட்ட மெய்யுணர்வைச் சிதைக்கும் வகையில் உள்ளன என்பதைக் கண்டு வருகின்றோம்.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் பின், வடமொழியில் எழுந்துள்ள முக்கிய உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவற்கீதை என்பவையே ‘முக்கிய பிரமாண நூல்கள்’ என வரையறை செய்துகொண்டு, “காதி மோதி வாதாடு வாராய்” விளக்கம் பெற்ற மதாசாரியர்கள் வழிவந்தவர்களால் குழப்பம் ஏற்பட, அக்குழப்பத்தை நீக்கித் தமிழ் நாட்டை உய்யக் கொள்ளவே மெய்கண்ட சந்தானம் தோன்றிற்று என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். இக்கருத்தைச் சந்தானாசாரியர் புராணம் பின்வருமாறு கூறுகின்றது. மெய்கண்டதேவர் திருஅவதாரத்தின் காரணத்தையும் பயனையும் அது,

“ கல்வியாத முனியுரைசெய் சூத்திரத்தின்
பாடியமோர் நான்கும் கொண்ட
சொல்வாய்மை பொருள்வாய்மை தெளிதலுற்றுஅ(ற)
ஓராது சோக முற்றோர்
எல்லாரும் அத்துவித சுத்தநிலை
இனிதெய்திச் சோக மேவப்
பொல்லாத சமயிகளும் அதிசயிப்பப்
புவனிமிசைப் போதம் ஏற ”

என விரித்துக் கூறுகிறது.

இங்ஙனமாகவும், திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலியவற்றை முதனூல்களாகக் கொள்ளுமாறு போல, “ மெய்கண்டானூலையும் ” முதநூலாகக் கொண்டு போற்றி வந்த உமாபதிசிவனார் உள்ளிட்ட ஆசிரியர்களது கொள்கைக்கு மாறாக வடமொழிச் சுலோகமே மூலம் எனக் கூறினமையால், வேற்றுச் சமயத்தினர் அச்சுலோகங்களுக்குத் தமக்கு ஏற்றபடி உரைகள் எழுதி மெய்கண்டதேவர் கூறியது உண்மை மொழிபெயர்ப்பன்று என்பாராயினர். இன்னும் திராவிட மாபாடியம் வடமொழிச் சிவஞானபோதத்திற்குச் சிவாக்கிரயோகியார் செய்துள்ள வியாக்கியானத்துள் சில முடிபுகளைக் குறிப்பாக மறுத்தலால், அவரா

தீனத்தில் வந்த மகாசந்நிதானம் ஒருவர் வடமொழிச் சிவஞான போதத்தைத் தாமே மொழிபெயர்த்து "இறை ஞான போதம்" எனப் பெயரிட்டுச் சிற்றுரையும் எழுதியுள்ளார். அவை 1943-ல் கும்பகோணம் ஸ்ரீமங்களாம்பிகா அச்சு நிலயத்தில் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. அது முதற் சூத்திரம்,

"பெண்ணாண் அலிமுதற் பிறங்கும் உலகம்
காரிய தர்சனம்; கர்த்தன் உளனும்
அவனிதை அழித்தே ஆக்குவன்
இதனாற் பிரபு இறையெனும் அரனே"

என அமைதல் வேண்டும் எனக் குறிப்பிக்கின்றது. பிறவும் இங்ஙனம் வேறுபடச் சொற் செய்யப்பட்டுள்ளன.

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்றபடி, தெளியப்பட்ட அருளாசிரியர்களை அளந்தற்குத் தெளியப்படாத நூல்களை அளவுகோல் என இடைக்காலத்துச் சைவர்கள் கூறிவந்ததனால்தான் சைவ வரம்பைப் பொதுமக்கள் உணர்ந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என அடியேன் கருதுகின்றேன். உண்மையே சமயம்.

காஞ்சிபுரம்,
14-9-1965

இங்ஙனம்
க. வச்சிரவேல் முதலியார்

உ

சிவஞானபோதம்

அவன்அவள் அதுஎனும் அவைமூ வினைமையில்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர். 1

அவையே தானே யாய்இரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே. 2

உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலில் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா. 3

அந்தக் கரணம் அவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா(து)
அமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே. 4

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே. 5

உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே. 6

தமிழ்ச் சங்கம

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியா(து) அசத்தில தறியா(து)
இருதிறன் அறிவுள(து) இரண்டலா ஆன்மா. 7

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே. 8

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதிவிதி எண்ணும்அஞ் செழுத்தே. 9

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே. 10

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காணஉள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே. 11

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே 12

உ

சிவமயம்

சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல

120 காரணங்கள்

சைவ சித்தாந்த சந்தான குரவர்கள் நால்வருள் முதல்வராகிய மெய்கண்டார் அருளிச்செய்த சிவஞான போதம் தமிழ் முதல் நூலே வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்படவில்லை என்பதுதான் உண்மை. இதற்கு மாறாக, ஸ்ரீ கண்டருத்திரர் நந்திதேவருக்கு, ரௌரவ ஆகமத்தில், பன்னிரண்டாம் அத்தியாயத்தில், எழு பத்து மூன்றாவதாகிய பாசவிமோசன படலத்தில், பன்னிரண்டு வடமொழி சூத்திரங்களை உபதேசித்தார் என்றும்; அவற்றை முறையே சநற்குமாரரும், சத்தியஞான தரிசனிகளும், பரஞ்சோதி முனிவரும் உபதேசத்தில் பெற்றனர் என்றும்; பரஞ்சோதி முனிவர் மெய்கண்டாருக்கு உபதேசித்தார் என்றும்; மெய்கண்டார் தமக்குக் கிடைத்த பன்னிரண்டு வடமொர்ழி சூத்திரங்களைத் தமிழில் மொழி பெயர்த்துச் சிவஞானபோதம் என்று பெயர் வைத்தார் என்றும் கூறப்படுகிற வரலாறு பொய்யாக இருப்பினும், "பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என்கிற நியாயம் பற்றிச் சைவர்களிற் பலரைப் பல நூற்றாண்டுகளாக ஏமாற்றி வந்துள்ளது. இப்பொய் வரலாற்றை 120 காரணங்கள் காட்டி மறுத்து உண்மையை நிலை

நாட்டுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும். உண்மை ஓங்குக, பொய் ஒழிக.

1. தாம் அருளியது முதல் நூல் அல்ல, மொழி பெயர்ப்பே என்று மெய்கண்டார் எங்கும் கூறவே யில்லை.

2. தாம் மொழி பெயர்த்தது உண்மையானால், அந்தச் செய்தியை, அவசியமாகக் கூறவேண்டிய இடங்கள், மிகுந்த பொருத்தத்தொடு கூறக்கூடிய இடங்கள் பலவற்றுள் ஓரிடத்திலேனும் அவர் தவிராமல் கூறி யிருப்பார்.

3. உண்மையை ஒளிக்க வேண்டும் என்ற எண்ணம் மெய்கண்டாருக்கு ஒருபோதும் இருந்திருக்க மாட்டாது.

4. முதன் முதலாகக் கடவுள் வாழ்த்தில், வடமொழி சூத்திரங்கள் வந்த வரலாற்றைக் ''கல்லால் நிழல் மலைவில்லார் அருளிய" என்பதன் பின் ''சொல்லா றிருதொடர் வல்லார் அடிதொழ'' என்று குறித்து விட்டுப் பின்பு ''பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே" என்று முடித்திருக்கலாம்.

5. இந்த நல்ல சந்தர்ப்பத்தை விட்டுவிட்டபோதிலும், அடுத்த பாட்டில் அவையடக்கம் கூறும் இடத்திலாவது, தாம் வடமொழி மூலத்துக்கியைய, மொழி பெயர்த்திருப்பதாகவும், சிற்சில குறைபாடுகள் இருப்பினும் அறிஞர்கள் பொறுத்தருள வேண்டும் என்றும் கூறியிருப்பார்.

6. இதற்கு முற்றிலும் மாறாக, முதல் நூல் செய்கிற ஆசிரியர் ஒருவர், எப்படி அவையடக்கம் கூறுவாரோ, அப்படியே தாமும் கூறியிருக்கிறார்.

7. தாம் மொழி பெயர்த்தது உண்மையாயிருந்தால், வடமொழியில் முதல் சூத்திரத்தில் இல்லாத

''என்மனோர் புலவர்'' என்ற சொற்களைச் சேர்த்திருப்பது மிகப் பெரிய மோசமும் குற்றமும் ஆகும்.

8. உண்மையை மறைப்பதோடு (Suppressio veri) உண்மையல்லாத ஒன்றைக் கூறும் (Suggestio falsi) குற்றமும் இங்கு ஏற்படும்.

9. ஸ்ரீ கண்டருத்திரர் திருவாக்கை, அளவை நூல் உணர்ந்த உலகத்து மக்கள்மேல் வைத்துக் கூறுவது பெருந்தவறு.

10. சைவர்களுக்கு எல்லையில்லாத நம்பிக்கையைத் தரக்கூடிய பிரமாணமான ஸ்ரீ கண்ட ருத்திரர் திருவாக்கை உலக மக்கள் பசுவாக்காகவே மதித்து ''என்மனோர் புலவர்" என்று திரித்துக் கூறி, அவர்களுடைய நம்பிக்கையை வேண்டுமென்றே குலைக்கும் குற்றமும் மெய்கண்டாரைச் சாரும்.

11. வடமொழியிலுள்ள பன்னிரண்டாவது சூத்திரத்தில் ''ஏவம் வித்யாத் சிவஜ்ஞானபோதே சைவார்த்த நிர்ணயம்'' என்ற பகுதியை, மெய்கண்டார் தமது பன்னிரண்டாம் சூத்திரத்தில் அடியோடு விட்டிருக்கிறார். தாம் மொழி பெயர்த்தது உண்மையானால், இதைவிடாமல் சேர்க்க வேண்டிய அவசியமும் பொறுப்பும் மெய்கண்டாருக்கு உண்டு.

12. மொழி பெயர்ப்புக் கொள்கை உண்மையானால், பற்பல இடங்களில் ஸ்ரீ கண்டருத்திரர் திருவாக்கை மாற்றியும், விட்டும், வேறு பலவற்றை அத் திருவாக்கோடு சேர்த்தும், வேறு எந்த மொழிபெயர்ப்பாளரும் செய்யத் துணியாத, பல அடாத காரியங்களை மெய்கண்டார் செய்துள்ளார் என்று கொள்ளவேண்டிவரும் (விவரம் 61 முதல் 119 வரை பார்க்க).

13. ''கண்ட இருதயகமல முகைகள் எல்லாம் கண் திறப்பக் காசினிமேல் வந்த அருட் கதிரோன்...மெய் கண்ட தேவன் மிகுசைவ நாதன்'' என்று புகழப்பெறும்

சந்தான முதற் குரவர் இத்தகைய மோசம், குற்றம், அடாத செயல்களைச் செய்திருக்கவே மாட்டார். ஆகையால், மொழி பெயர்ப்புக் கொள்கையே தவறானது.

14. மெய்கண்டாருடைய தலைமாணாக்கராகிய அருணந்தி சிவாசாரியார், தமது ஆசிரியரை, மொழி பெயர்ப்பாளராகக் கூறவேயில்லை.

15. சகல ஆகம பண்டிதர் என்று புகழ்பெற்ற இவர், ரௌரவ ஆகமத்தில் இந்த சூத்திரங்கள் இருந்தால், மெய் கண்டார் இவைகளை மொழிபெயர்த்திருந்தால், இச்செய்திகளைக் கட்டாயமாகக் கூறியிருப்பார்.

16. மெய்கண்டார் நூலை முதல் நூல் பிரமாணமாகக் கொள்வதைவிட, ஆகம சூத்திரங்கள் பன்னிரண்டையும் அசைக்க முடியாத பிரமாணமாகக் கொண்டிருப்பார்.

17. வேதத்தைப் பொது என்றும் சிவாகமங்களையே சித்தாந்தம் என்றும் (சித்தியார் சுபக்கம் 8.15ல்) கூறும் இவர், தமது ஆசிரியர் முதல்நூலுக்குப் பெரிதும் ஒத்த சூத்திரங்கள் பன்னிரண்டு ரௌரவ ஆகமத்தில் இவர் காலத்தில் இருந்திருந்தால், ஒருபோதும் விட்டிருக்கவே மாட்டார்.

18. "மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம்" என்று (சித்தியார் சுபக்கம் பாயிரம் 3ல்) கூறுகிறாரே தவிர, ரௌரவ ஆகம சூத்திரங்களையோ, அவற்றின் மொழி பெயர்ப்பையோ சென்னியிற் கொள்வதாகக் கூறவில்லை.

19. தாம் அருளிய "இருபா இருபது" என்ற சாத்திரத்திலும், மெய்கண்டாரைச் சிவமாகவே புகழ்கின்றாரே தவிர, மொழி பெயர்ப்பாளர் என்று எண்ணவேயில்லை.

20. இந்த சாத்திரத்தில், பல வினாக்களை விண்ணப்பம் செய்யும் இடத்தில், வடமொழி சூத்திரங்களுக்கும் மெய்கண்டார் சூத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளில் ஒன்றையேனும் பற்றி ஒரு வினாவிலேனும் எழுப்பவேயில்லை.

21. குரு மரபு கூறும் இடத்திலும் (சித்தியார் பரபக்கம் பாயிரம் 10) வடமொழி சூத்திரங்களும் மொழி பெயர்ப்புச் செய்தியும் கூறப்படவேயில்லை.

22. "முன் நாள் இறைவன் அருள்நந்தி தனக்கியம்ப நந்திகோதில் அருட்சனற்குமாரற்குக் கூறக், குவலயத்தின் அவ்வழி எம் குருநாதன் கொண்டு, தீதகல எமக்களித்த ஞானநூலைத் தேர்ந்து" என்ற சொற்றொடரை ஆராயும் இடத்து, மெய்கண்டார் கொண்டது வழி என்றும், கொடுத்தது நூல் என்றும் தெளிவாகப் புலப்படும்.

23. மெய்கண்டார் வடமொழி சூத்திரங்களைப் பெற்றது உண்மையானால் அவ்வழி என்னாமல் அம்மொழி என்று கூறியிருப்பார்.

24. மேற்கூறிய பத்து (14-23) காரணங்களில் இருந்து, ரௌரவ ஆகமத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்களும், அவைகளை மெய்கண்டார் மொழிபெயர்த்தார் என்ற வரலாறும், அருணந்தி சிவாசாரியார் காலத்தில் இல்லவேயில்லை என்று துணிந்து கூறலாம்.

25. இவ் வரலாறு அவர் காலத்தில் இருந்திருப்பின் இதைத் தழுவியேனும் அல்லது மறுத்தேனும், தெளிவாக ஒரு சொல்லேனும் அவர் அருளியிருப்பார்.

26. மெய்கண்டாருடைய மாணாக்கருள் மற்றொருவர் ஆகிய திருவதிகை மனவாசகம் கடந்தாரும், தாம் அருளிய "உண்மை விளக்கம்" என்ற சாத்திரத்தில் இந்த வரலாற்றைக் கூறவேயில்லை.

27. பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுள் ஏழு சாத்திரங்களை அருளிச்செய்த உமாபதி சிவாசாரியாரும், ரௌரவ ஆகம சூத்திரங்களைப்பற்றியும், மெய்கண்டார்

மொழி பெயர்த்தார் என்ற வரலாற்றைப் பற்றியும் ஒன்றுமே கூறவில்லை.

28. குருமரபு கூறும் செய்யுளில் (சிவப்பிரகாசம் பாயிரம் 5) ஸ்ரீ கண்ட ருத்திரர் நந்திதேவருக்கு வடமொழி சூத்திரங்களைக் கொடுத்த செய்தியேனும், பரஞ்சோதி முனிவர் அந்த சூத்திரங்களை மெய்கண்டாருக்குக் கொடுத்த செய்தியேனும், மெய்கண்டார் அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்தார் என்ற செய்தியேனும் கூறப்படவேயில்லை. இச்செய்திகள் அவர் காலத்தில் இருந்திருப்பின், அவர் கூறாமல் விடுவதற்கு நியாயமேயில்லை.

29. நூல்மரபு கூறும் செய்யுளில் (சிவப்பிரகாசம் பாயிரம் 11) மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தை முதல் நூலாகக் கூறுகின்றாரே தவிர, வடமொழி சூத்திரங்களை அவர் கூறவேயில்லை. அவர் கூறாமல்விட்டதற்கு, அச்சூத்திரங்கள் அவர் காலத்திலும் இல்லை என்பதைத் தவிர வேறு தகுந்த காரணம் ஒன்றுமே இல்லை.

30. மேலே கூறிய செய்யுளில் சிவஞான போதத்தையும் சிவஞான சித்தியையும் "விரும்பி நோக்கிக் கருத்தில் உறை திருவருளும் இறைவன் நூலும் கலந்து" என்னும் இடத்தில், பொதுவாகச் சிவாகமங்களைக் கூறுகின்றாரே தவிர, ரௌரவ ஆகம சூத்திரங்களைக் குறிக்கவேயில்லை. குறிக்காமல் விட்டதற்குத் தகுந்த காரணம் ஒன்றுமே இல்லை.

31. மெய்கண்டார் காலத்திற்கு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் முன்பிருந்த திரிலோசன சிவாசாரியார், "சித்தாந்த சாராவளி" என்ற தமது வடமொழி நூலில், இந்தப் பன்னிரண்டு சூத்திரங்களில் ஒன்றையேனும், இவற்றை ஸ்ரீகண்டருத்திரர் நந்தி தேவருக்கு அருளிய வரலாற்றையேனும் கூறவே இல்லை.

32. தமது நூலில் சரியா பாதத்தில் மூன்றாவது நான்காவது சுலோகங்களில் ஆகமங்களின் வகை,

பெயர், வரலாறு முதலியன கூறும் இடத்தில், ரௌரவ ஆகமத்தின் பெயர் கூறப்படுகின்றதே தவிர, இந்த சூத்திரங்கள் பன்னிரண்டும் அதில் உள்ளன என்ற செய்தியோ, அவைகளை நந்திதேவர் பெற்றார் என்ற வரலாறோ கூறப்படவில்லை. சகல ஆகமங்களின் சாரமாக, நந்திதேவருடைய மலைவுதீர்தற் பொருட்டு இச்சூத்திரங்கள் அருளப் பெற்றிருப்பின், இவர் இச்செய்திகளைக் கூறாமல் விடுதற்கு நியாயமில்லை.

33. இச் சூத்திரங்களும் இவற்றின் வரலாறும் இவர் காலத்தில் இருந்திருப்பின் சித்தாந்தத்தின் சாரத்தைப் பிழிந்து, "சித்தாந்த சாராவளி" என்றே பெயரிட்ட தமது நூலில், சித்தாந்த சாரமாகிய இப்பன்னிரு வடமொழி சூத்திரங்களை மிக விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்து ஆண்டிருப்பார்.

34. அஷ்டபிரகரணங்களுள் ஒன்றாகிய "தத்துவ சங்கிரகம்" என்ற நூலை இயற்றிய சத்தியோ ஜோதி சிவாசாரியார் என்பவர், ரௌரவ ஆகமத்திற்கு எழுதிய "சுவிருத்தி" என்ற உரையில், இப்பன்னிரு சூத்திரங்களேனும் இவற்றின் உரையேனும் காணப்படவில்லை.

35. அகோரசிவாசாரியார்(கி.பி. 15ஆம் நூற்றாண்டு) தமது நூல்களிலும் உரைகளிலும் ரௌரவ ஆகமப் பகுதிகள் பலவற்றை மேற்கோள் காட்டினும், இப்பன்னிரு சூத்திரங்களுள் ஒன்றையேனும் காட்டவேயில்லை.

36. நாராயணகண்டர், பட்டராமகண்டர் முதலிய பல பெரியார்களும், தங்கள் நூல்களிலும் உரைகளிலும், இச் சூத்திரங்களில் ஒன்றையேனும் எடுத்தாளவில்லை.

37. சைவத்திற்குப் பெரிதும் தொண்டுபுரிந்த ஹரதத்தாசாரியர் இச் சூத்திரங்களை மேற்கோளாகக் காட்டவில்லை.

38. ஆகமங்களைப் போற்றி நிரம்பவும் ஆதரித்தெழுதிய நீலகண்ட சிவாசாரியார் தமது பாஷ்யத்தில் இச் சூத்திரங்களைக் குறிக்கவில்லை.

Pam 1438

39. அப்பைய தீக்ஷிதர், நீலகண்ட தீக்ஷிதர் முதலியோரும் குறிக்கவில்லை.

40. ஆதி சங்கராசாரியார் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்திலேனும், பாஷ்யத்திலேனும் பிற நூல்களிலேனும் இச் சூத்திரங்களையும் வரலாற்றையும் பற்றி ஒன்றும் குறிக்கவில்லை.

41. மாதவாசாரியார் தாம் இயற்றிய சர்வதரிசன சங்கிரகத்திலேனும், பிற நூல்களிலேனும் இவைகளைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

42. கி. பி. 1400ல் இருந்தவராகக் கூறப்படும் ஸ்ரீபதி பண்டிதாசாரியார், தமது ஸ்ரீகரபாஷ்யத்தில், பல ஆகம வாக்கியங்களை மேற்கோள்களாகக் காட்டிய போதிலும், இச் சூத்திரங்கள் பன்னிரண்டினுள் ஒன்றையேனும் காட்டவில்லை.

எனவே, மெய்கண்டார் காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்து அவர் காலத்திற்குப் பின்பு சுமார் 200 ஆண்டுகள் வரையில், இவ்வடமொழி சூத்திரங்கள் பன்னிரண்டும் இவை வந்த வரலாறும், இவைகளை மெய்கண்டார் தமிழில் மொழிபெயர்த்தார் என்ற வரலாறும், எந்த நூலிலும், எந்த ஆசிரியர் ஆட்சியிலும் காணப்படவில்லை. இனி, இவை தோன்றிய வகையைக் கவனிப்போம். கி. பி. 1400க்குப் பிறகு, "கர்ணபரம்பரை" என்ற இடத்தில் கருவுற்று, நூல்களில் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைகாட்டி ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்குள் மெய்ப்பாடு நிரம்பிய பல விவரங்களோடு (full and graphic details) முழு உருப் பெற்றது என்று கூறலாம்.

43. உமாபதிசிவாசாரியார் அருளிய சிவப்பிரகாசத்திற்கு மதுரைச் சிவப்பிரகாசத் தம்பிரான் ஓர் உரையெழுதி சாலிவாகன சகாப்தம் 1410 இல் (கி.பி. 1488) வெளியிட்டனர். இவ்வுரையில்தான், யாம் அறிந்த

மட்டில் இவ்வரலாறு சுருக்கமாக முதன் முதலில் தலை காட்டிற்று. இவர் கூறும் வரலாறு மிக நுணுக்கமாக ஆராய்தற்குரியது. இவர் கூறும் வரலாறு கீழ் வருமாறு:—(சித்தாந்த சாத்திரம் சமாஜ 2ஆம் பதிப்பு-பக்கம் 709, 710) "ஸ்ரீகண்ட பரமேசுவரன் தான் அருளிச் செய்த முன்னூலாகிய சிவாகமத்தில் ஞான காண்டமாயிருக்கப்பட்ட பதிபசு பாசத்தின் உண்மையை ஸ்ரீ நந்திதேவ தம்பிரானுர்க்குக் கடாக்ஷித்தருள, அந்த உபதேசத்தின் பயனுயிருக்கப்பட்ட சிவஞானபோதமாகிய மூலக் கிரந்தம் பன்னிரண்டையும் ஸ்ரீ நந்திதேவ தம்பிரானுற் சநற்குமார பகவான் முதலாயுள்ள இருடிகளுக்குக் கடாக்ஷித்தருள, அந்த சநற்குமார பகவான் சத்தியஞான தரிசனிகளுக்குக் கடாக்ஷித்தருள, அந்த சத்தியஞான தரிசனி பரஞ்சோதி மாமுனிகளுக்குக் கடாக்ஷித்தருள, அந்தப் பரஞ்சோதி மாமுனிகள் திருவெண்ணெய் நல்லூரே திருப்படை வீடாக உடைய மெய்கண்ட தேவ தம்பிரானுர்க்குக் கடாக்ஷித்தருள, அந்த மெய்கண்ட தேவதம்பிரானுர் அந்த மூலக்கிரந்தம் பன்னிரண்டின் வழியே பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து அந்நூற் பெயராலே சிவஞான போதம் என்னும் திருநாமத்தினையும் சாத்தி வழிநூலாகச் செய்தருளித் தமது திருவடியைப் பெற்ற அருணந்தி தேவதம்பிரானுர்க்குக் கடாக்ஷித்தருள........." இவ்வரலாற்றில் கூர்ந்து கவனிக்க வேண்டியவை:— (1) ஸ்ரீ கண்டருத்திரர் மூலக் கிரந்தம் பன்னிரண்டையும் அருளிச்செய்தார் என்றேனும், நந்திதேவருக்குக் கொடுத்தார் என்றேனும் கூறப்படவில்லை. (2) ரௌரவ ஆகமத்தில் இன்ன அத்தியாயத்தில் இன்ன படலத்தில் இந்த மூலக்கிரந்தம் உள்ளது என்று கூறப்படவில்லை. (3) பதிபசு பாசத்தின் உண்மையை ஸ்ரீநந்திதேவருக்குக் கடாக்ஷித்தருள, அந்த உபதேசத்தின் பயனுய் இருக்கப்பட்ட சிவஞானபோதமாகிய மூலக் கிரந்தம் பன்னிரண்டையும் ஸ்ரீ நந்திதேவ தம்பிரா

னார் சநத்குமாரபகவான் முதலியவர்கட்கு அருளினார் என்றே கூறப்பட்டுள்ளது. (4) சூத்திரம் என்றாவது, சுலோகம் என்றாவது கூறாமல், மூலக்கிரந்தம் என்று சாதுரியமாகக் கூறப்பட்டுள்ளது. (5) மெய்கண்டார் "அந்த மூலக்கிரந்தம் பன்னிரண்டின் வழியே பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து" என்று மிகச் சாதுரியமாகக் கூறப்பட்டுள்ளது. (6) மெய்கண்டார் மொழிபெயர்த்தார் என்று கூறப்படவில்லை. (7) மெய்கண்டார் வகுத்ததற்கே சூத்திரம் என்ற பெயர் தரப்பட்டுள்ளது.

44. சிவஞான போதத்தின் தொடக்கத்தில் உள்ள "மலர்தலை உலகின்" என்று தொடங்கும் சிறப்புப் பாயிரத்திலும் "நந்தி முனி கணத்தளித்த உயர் சிவ ஞான போதம்" என்றே கூறப்பட்டுள்ளது.

45. மதுரைச்சிவப்பிரகாசர் காலத்திற்கு நூறாண்டுகள் பிந்தியவரும், சூரியனார் கோயில் ஆதீனத்தைச் சேர்ந்தவரும் ஆகிய சிவாக்கிரயோகிகள், தமது சிவாக்கிர பாஷ்யத்திலும் சிவஞான சித்தியார் உரையிலும் தொடக்கத்தில் இவ்வரலாற்றில் பல புதிய விஷயங்களைச் சேர்த்தனர். அவை கீழ் வருவன:—(1) வேதாகமங்களைப் பயில்வதில் பல சந்தேகங்கள் ஏற்படுவதால், அவற்றை நீக்கி மோக்ஷம் அடைவதற்குச் சுருக்கமாக உபதேசிக்க வேண்டும் என்று நந்திதேவர் ஸ்ரீகண்டருத்திரரை வேண்டிக் கொள்ளுதல். (2) தமது சந்தேகங்களை ஐம்பத்தொரு வினாக்களாக அவர் விவரித்தல். (3) ஸ்ரீகண்டருத்திரர் ரௌரவ ஆகமத்தில் பாசவிமோசனப் படலத்தில் அநுஷ்டுப் சந்தசில் உள்ள சர்வாகம சாரமாயிருக்கும் பன்னிரண்டு சூத்திரங்களை நந்திதேவருக்கு உபதேசித்தல். (4) அவரிடமிருந்து உபதேசக் கிரமத்தில் இச்சூத்திரங்களை வழிவழியாகப் பெற்ற பரஞ்சோதி முனிவர் "இந்தச் சிவஞான போதத்தை மொழி பெயர்த்துத் தமிழாகச் செய்து பக்குவ ஆன்மாக்

களுக்கு உபதேசியும்" என்று மெய்கண்டாருக்கு அனுக்கிரகம் பண்ணுதல். (5) மெய்கண்டார் அவ்வாறே மொழி பெயர்த்தல்.

46. மதுரைச் சிவப்பிரகாசரும் சிவாக்கிரயோகிகளும் தாங்கள் கூறும் வரலாற்று விவரங்களுக்கு எவ்வித பிரமாணமும் முன்னோர் வாக்கும் ஆதாரமாகக் காட்டாமல் "நாம் சொல்லுகிறோம் நீர் நம்பும்" என்ற முறையில் அவைகளைக் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

47. சிவாக்கிரயோகிகள் காலத்திற்கு இருநூறாண்டுகள் பிந்தியவர் ஆகிய சிவஞான முனிவர், தமது பாடியத்தில் (சமாஜப் பதிப்பு பக்கம் 14-16) கீழ்வருவனவற்றைச் சேர்த்துள்ளனர்: (1) "ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாகலான், அது பலதிறப்படுதல் பொருந்தாமையின், அவையெல்லாம் தூலாருந்ததி முறைமை பற்றிக் கூறப்பட்டனவன்றி, மாறுகோள் அல்ல என்பது வகுத்துணர்த்துதற் பொருட்டு, இரௌரவாகமத்துட் பன்னிரு சூத்திரத்தாற் கூறப்பட்டது சிவஞானபோதம் என்பதோர் படலம், அது கேட்டார்க்கு எல்லா ஆகமப் பொருளும் மாறுகோளின்றி இனிது விளங்கும்" என்று கூறி ஸ்ரீ கண்ட ருத்திரர் நந்திபெருமானுக்குப் பன்னிரண்டு வடமொழி சூத்திரங்களை அருளிச் செய்தல். (2) பரஞ்சோதி முனிவர் "மொழி பெயர்த்துச் செய்து பொழிப்பும் உரைக்க" என்று மெய்கண்டாருக்குக் கட்டளையிடுதல். (3) மெய்கண்டார் அவ்வாறே மொழி பெயர்த்துப் பொழிப்புரையும் செய்தல் (படலத்தின் பெயர் பாசவிமோசனப் படலம் என்றிராமல் சிவஞான போதம் என்பதோர் படலம் என்று சிவஞான முனிவர் கூறுவது கவனித்தற்குரியது).

மேற்கூறிய விவரங்களிலிருந்து, அருணந்தி சிவாசாரியரும் உமாபதி சிவாசாரியரும் கூறிய குருமரபு நூல் மரபுகளை அடிப்படையிற்கொண்டு, அவ்விருவரும் கூறாத

வடமொழி சூத்திரங்கள் மூலம் என்ற கொள்கையும், அவற்றை மெய்கண்டார் மொழி பெயர்த்தார் என்ற கொள்கையும், எவ்வாறு கருவுற்று உருப்பெற்றன என்பது நன்கு புலனாகும்.

48. இவ்வரலாறு ஏற்பட்டதற்குச் சில காரணங்கள் உண்டு. மதுரைச் சிவப்பிரகாசர் காலத்திலும் சிவாக்கிரயோகிகள் காலத்திலும், தமிழ் நாட்டில் விஜய நகர மன்னர் ஆட்சி வலுப்பெற்றிருந்தது. இம்மன்னர்கள் காலத்தில்தான் தமிழ் நூல்களில், வடமொழி கடல் மடை திறந்தாற் போல நுழைந்தது; ஆரியக் கொள்கைகளும் பழக்க ஒழுக்கங்களும் சடங்குகளும் தமிழ் நாட்டில் சிறு சிறு ஊர்களிலும் குடியேறின; தமிழ் நூல்களுக்கெல்லாம் வடமொழி மூலமும் ஆதாரமும் காட்டுவதே உயர்வு என்ற தவறான கொள்கை பரவியது. இம் மன்னர்களுக்குத் தமிழ் மொழியும் நாகரிகமும் அதிகமாகத் தெரியாது; ஆரிய மொழியும் நாகரிகமும் தெரியும். முடிவழி குடிசெலும் என்ற முறை இம்மாறுதலை உண்டாக்கிற்று. சிவஞான போத வரலாற்றிலும் இச்சீர்கேடு புகுந்தது.

49. சிவஞான போதத்திற்கு மட்டுமன்றி, வேறு பல தமிழ் நூல்களுக்கும் வடமொழி ஆதாரம் காட்டும் தீய ஒழுக்கமும் பரவிற்று. திருமந்திரத்திற்கு "ஸ்ரீமந்த்ர மாலிகா" என்றொரு வடமொழி மூலம் கற்பனை செய்யப்பட்டது; பெரிய புராணத்தை மொழி பெயர்த்த உபமன்யு பக்த விலாசம் அதற்கே வடமொழி மூலமாயிற்று; தலபுராணங்கட்கெல்லாம் வடமொழியில் மஹாத்ம்யங்கள் தோன்றின; ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் முதலிய பல நூல்களுக்கும் வடமொழியில் மொழி பெயர்ப்புண்டு.

50. மதுரைச் சிவப்பிரகாசர் முதன்முதலில் இவ்வரலாற்றைத் தொடங்குவதற்கு ஒரு விசேஷ காரணம் உண்டு. தமது உரையில் தாம் கூறுவதற்கெல்லாம் மேற்கோள் காட்டும் நல்ல பழக்கம் இவருக்கு மிக அதிகமாயிருந்தது. "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும்" என்ற இலக்கண விதியை ஒட்டிச் சிவாகமத்தை முதல் நூல் என்றார்; மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்தை வழிநூல் என்றார். (சித்தாந்த சாத்திரம்-சமாஜ 2-ஆம் பதிப்பு பக்கம் 710) இலக்கண விதியே இவர் காலநிலைமையோடு கூடி இவ்வரலாற்றை இவர் தொடங்கும்படி செய்தது என்று கூறுதல் தவறாகாது.

51. சிவாக்கிரயோகிகள் இவ்வரலாற்றில் சில விவரங்களைச் சேர்த்ததற்கும் விசேஷ காரணங்கள் உண்டு. மெய்கண்டாருடைய தமிழ்ச் சூத்திரங்கள் நாட்டில் நன்றாகப் பரவிற்று. வைணவர்கள் நாலாயிர திவ்விய ப்ரபந்தங்களுக்கு இராமாயணம், பாரதம், பாகவதம், பகவத்கிதை முதலிய பல வடமொழி நூல்களிலிருந்து பலமேற்கோள் காட்டி "ஈடு முப்பத்தாறாயிரப் படி" முதலிய விரிவான உரைகளைச் செய்தார்கள். மெய்கண்டார் சூத்திரங்களுக்கு வடமொழியில் ஒரு பாஷ்யம் எழுத வேண்டும் என்ற விருப்பம் வடமொழி தமிழ் மொழிகளில் நல்ல புலமையுடைய சிவாக்ரயோகிகளுக்கு உண்டாயிற்று. அக்காலத்திய விஜயநகரப் பிரதிநிதியும் இவரிடம் நிரம்பிய அன்புடையவன். யோகிகளுடைய குருவும் வடமொழியில் சிற்றுரையும் பாஷ்யமும் எழுதும்படி கட்டளையிட்டனர். நூல் முழுமையும் வட மொழியிலும், பன்னிரண்டு சூத்திரங்கள் மட்டும் தமிழிலும் இருந்தால் நன்றாயிராதென்று இயல்பாக எண்ணினர் போலும். மூலக்கிரந்தம் பன்னிரண்டையும் மெய்கண்டார் தமிழிற் செய்தார் என்று மதுரைச் சிவப்பிரகாசர் கூறியது இவருக்குத் துணையாயிற்று. மூலக்கிரந்தம் ரௌரவ ஆகமத்திலுள்ளதென்றும் நந்திதேவ

ருக்கு ஸ்ரீ கண்டருத்திரர் தந்ததென்றும் வரலாற்றைச் சிறிது பெருக்கினர். இதற்குப் பொருத்தமாக நந்தி தேவர் வினக்கள் ஐம்பத்தொன்று முதலியவற்றையும் கற்பித்தார்.

52. மற்ற ஆகமங்களைக் கூருமல், ரௌரவ ஆகமத்தில் இச்சூத்திரங்கள் உள்ளன என்றதற்கும் ஒரு சிறு காரணம் உண்டு. இந்த ஆகமத்தில் இடைச்செருகல்கள் நிரம்ப இருந்திருக்க வேண்டும். ஏன் என்ருல் கீழே பார்க்கலாம். அஷ்டப்பிரகரணங்களுள் ஒன்று "பரமோக்ஷநிராச காரிகை" என்பது. இதில் ரௌரவ ஆகமத்திலிருந்து இரண்டரை சூத்திரங்கள் (மேலே கூறிவரும் 12 சூத்திரங்களல்ல) மேற்கோள் காட்டப்பட்டு, சாங்கியர், வேதாந்திகள், பாஞ்சராத்திரிகள், பாதஞ்சலர், பாசுபதர் முதலிய மதத்தினர் கூறும் மோக்ஷலக்ஷணம் மறுக்கப்படுகின்றது. இம்மதங்கள் தோன்றிய காலத்தின் பிறகே இந்த $2\frac{1}{2}$ சூத்திரங்கள் இந்த ஆகமத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும். இதைப் போலவே, வேறு பல இடைச் செருகல்களும் இருந்திருக்கலாம். தமது பன்னிரண்டு வடமொழி சூத்திரங்களுக்கும் இந்த ஆகமம் இடந்தரும் என்று இவர் கருதியிருக்கலாம்.

53. இந்த வடமொழி சூத்திரங்களின் மூலபாடம் இவர் தமது பாஷ்யத்தில் கொடுத்துள்ளதே. இம்மூல பாடத்தின் உண்மை ரூபம் (authenticity) முதலியவற்றை ஆராய்ந்தறிய வேறு வழியேயில்லை.

54. இவரே வடமொழி "சூத்திரங்கள்" என்று பெயர் கொடுத்தவர். இதன் காரணம் பெரிதும் ஆராய்ந்து சிந்திப்பதற்கு உரியது. வடமொழி வழக்கில், வசனத் துணுக்குகளுக்குத்தான் சூத்திரம் என்ற பெயர் உண்டு (bits of prose). பௌஷ்கரம், மிருகேந்திரம், வடமொழிச் சிவஞானபோதம் முதலிய நூல்களிலுள்ள செய்

யுள்களைச் சுலோகம் என்றும், இவைகளடங்கிய நூல்களைக் காரிகை என்றும் கூறுவதே வடநூல் வழக்காறு. லோகத்தைச் "சூத்திரம்" என்று சிவாக்ரயோகிகள் கூறியதன் காரணம் தமிழ்ச் சூத்திரத்தை வடமொழியில் மொழிபெயர்த்துத் தமிழில் சூத்திரம் என்று வழங்கிப் புகழ்பெற்றதை வடமொழியிலும் "சூத்திரம்" என்று சொல்லலாம் என்ற ஆசையேயாகும். இது கொண்டே, தமிழிலிருந்தே இச் சூத்திரங்கள் வடமொழிக்குச் சென்றன என்று கூறலாம்.

55. வடமொழியில் இந்தச் சூத்திரங்கள் எனப்படும் சுலோகங்கள் பன்னிரண்டும் அனுஷ்டுப் சந்தசில் (32 எழுத்துக்கள் கொண்டனவாக) யாக்கப் பெற்றமைக்கும் ஒரு காரணம் உண்டு. மதுரைச் சிவப்பிரகாசர் மூலக்கிரந்தம் பன்னிரெண்டென்ருர். முப்பத்திரண்டு எழுத்துக்களின் தொகுதியைக் கிரந்தம் என்பது வடமொழி வழக்கு (விஷ்ணு புராணம் 6000 கிரந்தம், வால்மீகி ராமாயணம் 24000 கிரந்தம், ஸ்காந்தம் 100,000 கிரந்தம் என்றெல்லாம் சொல்லப்படுவதைப் பார்க்கலாம்). "மூலக்கிரந்தம் பன்னிரண்டும்" (ஒவ்வொன்று முப்பத்திரண்டெழுத்துக்கள் கொண்ட) பன்னிரண்டு சுலோகங்களாயின.

56. வடமொழியில் பன்னிரண்டு சூத்திரங்களாகவே இவை மொழி பெயர்க்கப்பட்டாமைக்கு வேரெரு காரணமும் உண்டு. மெய்கண்டார் சூத்திரங்கள் பன்னிரண்டிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களையெல்லாம் வடமொழியில் பன்னிரண்டு சிறு சூத்திரங்களில் அடக்க முடியாமையே, பெரிய சுலோகங்களைக் கையாள வேண்டிய அவசியத்தை உண்டாக்கிற்று. இந்தச் சுலோகங்களைக் கொண்டபோதிலும், பற்பல வேறுபாடுகள் இருப்பதன் முக்கிய காரணம், இவை 32 எழுத்தென்ற அளவுக்குட்

பட்டமையேயாகும். வேறு சில காரணங்களும் (கீழே 120 பார்க்க) உண்டு.

57. சிவாக்கிரயோகிகள் இப்படி வரலாற்றைப் புனைந்தது நல்ல எண்ணத்தோடே தான் என்பதில் ஐயமில்லை. மெய்கண்டார் சூத்திரக் கருத்துக்கள் பரவ வேண்டும் என்ற பொது நோக்கம் அவருக்கிருந்தது போற்றற்குரியதே. அவர் காலத்திய நிலைக்கேற்ப, புரை தீர்ந்த நன்மை பயந்தமையால் பொய்மையும் வாய்மை யிடத்ததாயிற்று.

58. பேரறிஞராகிய சிவஞான முனிவர் மொழி பெயர்ப்பு என்ற கொள்கையை ஏன் ஆதரித்தார்? இவர் சிவாக்கிரயோகிகளுக்கு 200 ஆண்டுகள் பிந்தியவர். இந்த 200 ஆண்டுகளுக்குள் இக்கொள்கை பலமாக வேரூன்றி விட்டது. திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து வெளிவந்த பல உரைநூல்களிலும் இக்கொள்கை ஆதரிக்கப்பட்டது. மொழிபெயர்ப்புக் கொள்கை ஸ்ரீகண்டருத்திரர் திருவாக்கென்ற செய்தியை அடிப்படையிற் கொண்டபடியால், அதனால் மக்களுக்கு ஏற்படும் நம்பிக்கையைக் குறைக்க முனிவர் கருதவில்லை. ஆதீன சம்பிரதாயத்திற்கு மாறாகவும் முனிவர் மறுக்க முயலவில்லை. சித்தாந்தக் கருத்து நுட்பங்களை விளக்கவந்தவர் வரலாற்றின் பொய் மெய்களை ஆராய வேண்டிய அவசியமில்லை.

59. உமாபதி சிவாசாரியார் பௌஷ்கராகமத்திற்கு ஒரு பாஷ்யம் எழுதியதாகவும், அதில் ஐந்திடங்களில் இவ்வடமொழி சூத்திரங்களை மேற்கோள்காட்டியிருப்பதாகவும் மொழிபெயர்ப்பு வாதிகள் ஒரு தடை கூறுவதுண்டு. இங்குக் கவனிக்க வேண்டியன பல உள:— (1) உமாபதி சிவாசாரியார் இப்பாஷ்யம் இயற்றினர் என்பதற்கு ஆதாரமே கிடையாது. (2) பௌஷ்கர விருத்தியை வெளியிட்ட கொ. சண்முகசுந்தர முதலியார் "இப்பௌஷ்கரத்திற்கு உமாபதி சிவாசாரியாரால் உரையிட்டிருப்பதாய் வழங்குவதன்றி ஓரிடத்தினும் அவருரையென்று அத்தாட்சியுடன் வெளிவரக் காண்கின்றிலன். திருவண்ணாமலை ஆதீனம், யாழ்ப்பாணத்துச் சாவிவாடிபுரம் ஞானப்பிரகாசத் தம்பிரானரால் சம்ஸ்க்ருத விருத்தி ஒன்று எழுதப்பட்டுள்ளது. இப்பிரதியே ஆதிசைவர்கள் முதலியோரிடத்தும் வழங்கிவரக் காணப்படுகின்றது'' என்று கூறுகிருர். (3) இப்போது வெளிவந்துள்ள பௌஷ்கர பாஷ்யம் இந்த ஞானப்பிரகாசத் தம்பிரான் எழுதியதே. ஆனல் உமாபதி சிவாசாரியார் இயற்றியதாகக் கூறப்படுகிறது. (4) உமாபதி சிவாசாரியார் கூறும் குருமரபு நூல்மரபுகளிலுள்ள விஷயங்களுக்கும் (மேலே 27-30 காரணங்களைப் பார்க்க) அவருடைய சங்கற்ப நிராகரணம், சிவப்பிரகாசம் முதலிய நூல்களிலுள்ள விஷயங்களுக்கும் மாறான பல கொள்கைகள் இந்த பாஷ்யத்திலுள்ளன (கடவுள் உபாதான காரணம் எனல்; சிவசமவாதத்தை ஆதரித்தல் முதலியன). (5) இந்த பாஷ்யத்தில் உமாபதி சிவாசாரியார் காலத்திற்குப் பிந்திய பல நூல்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. (தத்துவ சங்கிரகம் பாஷ்யம் பக்கம் 506; தத்துவப்ரகாசம் டீபக் 17, 245; தத்வஸாரம் 242; ரத்நத்ரயம் 20, 22, 24, 26, 43, 97, 108, 164, 208, 210, 212. முதலிய பல பக்கங்களில்; மோக்ஷகாரிகை 237; பரமோக்ஷ நிராசகாரிகை 234). (6) இந்த பாஷ்யம் பக்கம் 519ல் மாதவர்கள் நூலாகிய "ந்யாயாம்ருதம்" மேற்கோள்காட்டப்பட்டுள்ளது. இது உமாபதி சிவாசாரியார் காலத்திற்கு 200 ஆண்டுகள் பிந்தியது. இதைப்பற்றிய ஆராய்ச்சியைச் சென்னைப் பல்கலைக் கழகவெளியீடாகிய "The Sivadwaita of Srikanta" என்ற நூலில் 77வது பக்கத்திற் காண்க.

60. உமாபதி சிவம் எழுதியதாகவே வைத்துக் கொண்டாலும், மேற் கூறிய ஐந்திடங்களும் மொழி பெயர்ப்புக்கொள்கைக்கு ஆதரவு தர மாட்டா. இதைச் சிறிது ஆராய்வோம். இந்த ஐந்திடங்களில் மூன்றிடங் களில்தான் "சிவஞானபோதம்" என்று மேற்கோளில் கூறப்பட்டுள்ளது (பாஷ்யம் பக்கம் 29, 189, 256). மற்ற இரண்டு இடங்களில் (14, 447) இச்சிவஞான போதம் குறிக்கப்படவில்லை. இந்த பாஷ்யத்தில் ஏனைய ஆகமங் கள் குறிக்கப்படும்போது ஸ்ரீமங் ம்ருகேந்திரே, ஸ்ரீமங் மதங்கே, என்ற மரியாதை முறை காணப்படுகிறது. ஆனல் மேற்கூறிய மூன்றிடங்களில் ஸ்ரீமங்ரௌரவே என்று குறிக்கப்படாமல் "சிவஜ்ஞானபோதே" என்று மட்டும் இருப்பதால், இந்த பாஷ்யம் எழுதினவர் தமிழ் சிவஞான போதத்தையே குறித்து, அதிலுள்ள சொற் ளெடருக்குத் தாமே ஒரு மொழிபெயர்ப்பைத் தருகிருர் என்று கொள்வதில் என்ன தடையுள்ளது? "ஸ்ரீமங் ரௌரவே" என்று கூருமல், "சிவஜ்ஞானபோதே" என் பதால் சிவஞான போதம் என்பது ஒரு தனிநூல் என்றே ஏற்படும். பன்னிரண்டு சூத்திரங்களை மட்டும் ஒரு தனிநூல் போல ஏன் கூறவேண்டும்? மேலும் விரிப் பில் இது மிகமிகப் பெருகும்.

இனி மேலே 12, 13ஆம் காரணங்களை ஒட்டி, ஒவ் வொரு வடமொழி "சூத்திரத்தையும்" அதற்கு மெய் கண்டார்மீது சுமத்தப்படும் "மொழிபெயர்ப்பையும்" ஆராய்வோம். வடமொழி சூத்திரங்கள் ஸ்ரீகண்டருத்திரர் திருவாக்கென்று கொண்டு, அவைகளை மொழிபெயர்க் கும் தொண்டினில் மெய்கண்டாருக்கு எவ்வளவு மிகுதி யாக அறியாமை, ஆகம வாக்கில் மதிப்பின்மை, ஆகம வாக்கை மாற்றக் குறைக்கச் சேர்க்கக் கூசாமை முதலிய குற்றங்கள் கற்பிக்க வேண்டுமென்பது விளக்கப்பட்டு,

இக்குற்றங்கள் தோன்றுவதற்கு இடம் தரும் மொழி பெயர்ப்புக் கொள்கையே தவறென்பது நிலைநாட்டப் பெறும். இம்முறை மேல்நாட்டுத் தருக்க நூலில் Reductload absurdum என்று கூறப்படும். ஒவ்வொரு சூத்திரமாக ஆராயலாம்.

61. முதல் சூத்திரம் "ஸ்த்ரீபுங்நபும்ஸகாதித்வாஜ் ஜகத: கார்யதர்சநாத், அஸ்தி கர்த்தா ஸஹ்ருத்வைத தஸ்ருஜத்யஸ் மாத்ப்ரபுர்ஹர:" என்பது. இதன் நேர் மொழிபெயர்ப்பு: "பெண் ஆண் அலி ஆதியாயிருத்தலின் காரியமாகக் காணப்படுதலின், ஜகத்திற்குக் கர்த்தா உண்டு, அந்தக்கர்த்தா இதனைச் சங்கரித்து சிருஷ்டிக் டிக்கிருன், ஆகையால் ஹரன்பிரபு" என்பது. மெய்கண் டார் சூத்திரம் "அவன் அவள் அது எனும் அவை மூவினை மையின், தோற்றியதிதியே ஒடுங்கி மலத்துளதாம், அந் தம் ஆதி என்மனர் புலவர்" என்பது. இனி ஒவ்வொரு சொல்லாக எடுத்துப்பார்ப்போம். "பெண்" என்று தொடங்காமல் "அவன்" என்று மெய்கண்டார் ஏன் தொடங்கினர்? முதற் கோணல் முற்றும் கோணல் என் பதை நன்கறிந்த சந்தான முதற்குரவர் ஆகமவாக்கி லுள்ள முறையை விளையாட்டாக மாற்றுவாரா? "அவன் அவள் அது எனும் அவை" என்று தொடங்குவதில் என்ன கஷ்டமுள்ளது?

62. "ஆதியாயிருத்தலின்" என்பதை ஏன் விட்டு விட்டார்?

63. இருத்தலின், காணப்படுதலின் என்று இரண்டு காரணங்களைக் கூருமல், மூவினைமையின் என்று ஏன் கூறினர்.

64. பெண் ஆண் அலி என்று பொதுவாக உள் ளதை "அவன் அவள் அது எனும் அவை" என்று ஏன் சுட்டுப் பொருள்களாகக் கூறினர்?

65. "காரியமாக" என்று பொதுவாக உள்ளதை, "மூவினைமையின்" என்று ஏன் சிறப்பித்துக் கூறினர்? முத்தொழில், ஐந்தொழில் என்றெல்லாம் வகுக்கக்கூடிய "காரியமாக" என்பதை ஏன் இப்படி மாற்றினர்?

66. "மூலத்தில்" இல்லாத "மலத்துளதாம்" என்பதை ஏன் சேர்த்தார்?

67. இவ்வாறு சேர்ப்பதால் "மலத்துளதாம்" என்ற கொள்கையை ஒப்புக்கொள்ளாத பலவாதிகளுக்கு இடமில்லை என்பதை அறிந்தா, அறியாமலா, வேண்டுமென்றா இதைச் சேர்த்தார்.

68. இப்பேற்பட்ட மிக முக்கியமானதொரு கொள்கையை, மொழிபெயர்ப்பென்ற சாக்கு காட்டி ஆகமவாக்கில் சேர்க்கலாமா?

69. "சங்கரித்து சிருஷ்டிக்கிறான்" என்ற தொடரில் இரண்டு செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கூறப்பட்டிருக்கின்றனவே தவிர, சங்காரகாரணன் என்பதனால் அவனே சிருஷ்டிக்கிறான் என்ற காரண காரிய முறை இல்லா திருப்பவும், அம்முறை தோன்ற "அந்தம் ஆதி" என்று ஏன் கூறினர்?

70. "ஹரன் பிரபு" என்று சைவர்கட்கு மிக உகப்பைத் தரக்கூடிய சொற்களை விட்டு விடுவது மிகுசைவநாதராகிய மெய்கண்டாருக்கு அடுக்குமா?

"என்மனார் புலவர்" என்று சேர்த்தது பற்றி மேலே 7—10 எண்ணுள்ள நான்கு காரணங்களைப் பார்க்கவும். சிவஞான பாடியம் முதலிய நூல்களில் மெய்கண்டார் சூத்திரங்கட்குக் கூறப்படும் பல நுட்பமான கருத்துக்களெல்லாம், வடமொழி சூத்திரங்களில் அமையவில்லை என்று ஆராய்ந்து பல நூறு காரணங்கள் காட்டலாம். இச்சிறு கட்டுரை அளவு கடந்து விரியும் என்று அஞ்சி, இச்சூத்திரம் பற்றிய ஆராய்ச்சியை இம்மட்டில் நிறுத்தி,

மேல்வரும் சூத்திரங்களைப் பற்றியும் சுருக்கமாகவே ஆராய்வோம். அறிஞர்கள் நுண்ணறிவால் பெருக்கிக் கொள்வர்.

71. இரண்டாம் சூத்திரம் "அந்யஸ்ஸந்வ்யாப்தி தோதந்ய: கர்த்தாகர்மாநுஸாரத: கரோதிஸம்ஸ்ருதிம் பும்ஸாம் ஆஜ்ஞயாஸமவேதயா" என்பது. இதன் நேர் மொழி பெயர்ப்பு: "வியாப்தியாயிருத்தலால் அநந்யனாகர்த்தா, அந்யமாயிருந்து கொண்டு, சமவேதமாயுள்ள ஆஞ்ஞையால், புருஷர்களுக்கு, கர்மத்தை யனுசரித்து, புனருற்பவத்தைச் செய்கிறான்" என்பது. மெய்கண்டார் சூத்திரம் "அவையே தானேயாய் இருவினையின், போக்கு வரவு புரிய ஆணையின், நீக்கமின்றி நிற்குமன்றே" என்பது. "வியாப்தியாயிருத்தலால்" என்ற காரணம் சைவ சித்தாந்தத்திற்கு முற்றிலும் விரோதம். கடவுளை வியாபகமாகவும் உயிர்களை வியாப்பியமாகவும், மலத்தை வியாப்தியாகவும் கொள்வதே சைவசித்தாந்தம். கடவுள் வியாப்தி என்ற கொள்கை கடவுளுக்கு (முதற் காரணம் என்ற) உபாதான காரணம் கூறும் சமயிகளுக்குப் பயன் படுவது. மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் சிவஞானசுவாமிகள் முதலிய சைவ சித்தாந்திகள் இதை ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் சிவாக்ரயோகிகள், யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசத் தம்பிரான் முதலியோர் கடவுளுக்கு உபாதான காரணத்தையும் நிமித்த காரணத்தையும் சேர்த்துக் கூறுவர். இந்த நுட்பம் ஒன்றிலிருந்தே சிவாக்ர யோகிகள் வடமொழி சூத்திரங்களைச் செய்திருத்தல் கூடும் என்று எண்ணுவதற்கு ஒரு தனியான தூண்டுதல் ஏற்படும். பௌஷ்கர பாஷ்யத்தை ஞானப்பிரகாசர் இயற்றினர் என்பதற்கு ஆதரவுதானே போதரும். மெய்கண்டார் இக்கொள்கையுடைய வடமொழி சூத்திரத்தைக் கனவிலும் கண்டறியார்.

Pam 1438

72. பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவிதமெய், அதாவது இன்மை அன்மை மறுதலைகளுள் அன்மைப் பொருள் கொள்ளும் சுத்தாத்வைத சைவசித்தாந்தம் "வியாப்தியாயிருத்தலின் அநந்யன்" என்ற சூத்திரத்தை மறுக்க வேண்டியது அவசியமாகையால், இச்சூத்திரத்தோடு சேர்ந்து வரும் ஏனைய பதினொரு சூத்திரங்களையும் இறை வாக்காக எங்ஙனம் துணிந்து ஒப்புக்கொள்ள முடியும்?

73. அவையாய், தானேயாய், அவையேதானாய் என்ற அந்வயத்துக்கு இடம் கொடுத்து, கலப்பினால் ஒன்றாய் பொருள் தன்மையால் வேறாய் தொழிற்பாட்டால் உடனுமாய் இறை நிற்கின்ற நுட்பம் மெய்கண்டார் திருவாக்கிலே காணப்படுகிறதே தவிர, வடமொழியிலில்லை.

74. வியாப்தியாயிருத்தலின் அநந்யன் என்று காரண காரிய முறையிருப்பது போல, எக்காரணத்தால் அந்யன் என்பதை வடமொழி சூத்திரம் கூறவில்லை.

75. முதல் சூத்திரத்திலுள்ள ஸ்த்ரீ நபும்ஸகாதிகளை விட்டு, பும்ஸாம் என்று மட்டும் இச்சூத்திரம் கூறுவது மலைவைத் தருகிறது.

76. கர்மத்தை அனுசரித்து என்று வடமொழியிற் பொதுவாயுள்ளது, மெய்கண்டார் திருவாக்கில் "இருவினையின்" என்று விளக்கம் பெறுகிறது.

77. மூன்றாம் சூத்திரம் "நேதிதோ மமதோத்ரே காதகேஷாபரதி போதத: ஸ்வாபே நிர்போகதோ போதே போத்த்ருத்வாதஸ்த்யணுஸ்தநௌ" என்பது. இதன் நேர் மொழிபெயர்ப்பு "இது இல்லை இது அல்ல என்பதாலும், எனதுடல் என்று அழுத்தமாகச் சொல்வதாலும், சொப்பனத்தில் கண் முதலியவற்றின் அறியும் தன்மையாலும், சுழுத்தியில் புசிக்கும் 'தன்மையின்மை'

யாலும், விழிப்பில் அறிவிக்க அறிவதாலும், உடலினுள் ஆன்மா உண்டு" என்பது. மெய்கண்டார் திருவாக்கு "உளதில தென்றலின் எனதுடல் என்றலின் ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில் உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின் மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா" என்பது. வடமொழியில் "இந்திரியங்களை அறிதலின்" என்ற காரணம் இல்லை. ஐம்புலன் அறிதலின் ஒடுக்கம் அறிதலின் என்று இரண்டு காரணங்களும் மெய்கண்டார் வாக்கிலுண்டு. ஐம்புலன் அறிதலின் என்ற காரணம் இந்திரியான்மாவாதிகளை மறுப்பதற்கெழுந்தது (சிவஞான பாடியம் சமாஜப் பதிப்பு பக்கம் 323 - 325).

78. வடமொழியில் உண்டியில்லை என்ற காரணம் தான் உளது; உடம்பின் சேஷ்டிதம் இல்லை என்ற மற்றொரு காரணமும் மெய்கண்டார் திருவாக்கிலுள்ளது. இவ்விரண்டுமே பிராணான்ம வாதிகளை மறுப்பன (பாடியம் பக்கம் 327 - 329).

79. சமூகான்மவாதிகளை மறுப்பது "உடம்பு மாயா காரியங்களால் ஆக்கப்பட்டமையால்" என்பது. இதை "மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா" என்று மெய்கண்டார் கூறுகிறார் (பாடியம் பக்கம் 332 - 335). வடமொழியில் "தனுவினுள் ஆன்மாவுளது" என்று வெறுமையாயுள்ளது.

80. நான்காம் சூத்திரம் "ஆத்மாந்த: கரணாதந்யோப் யந்விதோ மந்த்ரிபூபவத் அவஸ்தா பஞ்சகஸ்தோ அதோமல ருத்தஸ்வத்ருக்க்ரிய:" என்பது. இதன் நேர் மொழிபெயர்ப்பு "அந்தக்கரணத்துக்கு அந்நியனாயினும், ஆன்மா தனது ஞானக்கிரியைகள் மலத்தினால் மறைக்கப்பட்டிருப்பதால், மந்திரியுடனிருக்கும் அரசன்

போல, அந்தக் கரணத்தோடு கூடியிருப்பதால் ஐந்த வஸ்தைகளில் இருப்பவன் ஆகிறான்'' என்பது. மெய் கண்டார் திருவாக்கு ''அந்தக் கரணம் அவற்றின் ஒன் றன்று அவை சந்தித்தது ஆன்மா சகச மலத்துணராது அமைச்சரசேய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே'' என்பது. அறியாமையின் காரணம் ஆணவமலம் என்பதை ''சகச மலத் துணராது'' என்று மெய்கண்டார் விளக்குகிறார். வடமொழியில் பொதுவாக மலத்தால் மூடப்பட்ட என் றிருப்பதால், ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும் மலங் களுள் எதனால் மூடப்பட்டதென்பது விளங்காது. மாயா மலம் மறைப்பது என்று கூறும் வாதிகளை வடமொழி சூத்திரங்கொண்டு மறுக்க இயலாது.

81. மலத்தால் மூடப்பட்ட கிரியை என்பதற்கு நேராக மெய்கண்டார் வாக்கில் ஒன்றுமில்லை.

82. ஐந்தாம் சூத்திரம் ''விதந்த்யக்ஷாணிபும்ஸார்த் தாந் நஸ்வயம்ஸோபிசம்புநாதத்விகாரீ சிவச்சேந்நகாந் தோயோ வத்ஸதம்நயேத்'' என்பது. இதன் நேர் மொழிபெயர்ப்பு ''புருஷனால் (அறிவிக்கப்பட்ட) பொருள்களை இந்திரியங்கள் அறிகின்றன, ஸ்வயமாக அறிவதில்லை, அவனும் சம்புவினால் அறிகிறான், ஆகை யால் சிவன் விகாரி ஆவான் எனில் ஆகான், காந்தக்கல் இரும்பைச் சேஷ்டிப்பது போல அந்த சிவன் அந்த ஆன்மாவை சேஷ்டிப்பிக்கிறான்'' என்பது. மெய் கண்டார் திருவாக்கு ''விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு அளந்தறிந்தறியா ஆங்கவை போலத் தாந்தம் உணர் விற்றமியருள் காந்தம் கண்ட பசாசத்தவையே'' என்பது. இந்திரியங்கள் உயிரை அறிவதில்லை, உயிர் தன்னையும் தலைவனையும் அறிவ தில்லை என்ற கருத்துக்கள் மெய்கண்டார் வாக்கிலுண்டு, வடமொழியிலில்லை.

83. சம்புவினால் அறிகிறான் என்பது வடமொழி, சிற்சத்தியால் (தமியருள்) என்பர் மெய்கண்டார்.

84. சிவன் விகாரியாகான் என்று வடமொழி வெளிப்படையாகக் கூறுவதை மெய்கண்டார் நுட்ப மாக ''அவையே'' என்ற சொல்லினுள் உணர வைத் தார்.

85. ஆறும் சூத்திரம் ''அத்ருச்யம் சேதஸத்பா வோத்ருச்யம் சேஜ்ஜடி மாபவேத்சம்போஸ்தத்வ்யதி ரேகேணஜ்ஞேயம் ரூபம் விதுர்புதா:'' என்பது. இதன் நேர் மொழிபெயர்ப்பு ''சம்புவின் ரூபம் காணப்படாத தாம் எனின் அசத்தாகும், காணப்படுவதெனின் ஜடமா கும், அவ்விரண்டிற்கும் வேறான ஒன்றால் அறியத்தக்க தென்று அறிஞர் அறிகின்றனர்'' என்பது. மெய்கண்டார் திருவாக்கு ''உணருரு அசத்தெனின் உணராதின்மை யின் இருதிறனல்லது சிவசத்தாமென இரண்டு வகை யின் இசைக்கு மன்னுலகே'' என்பது. காணப்படுவது படாதது என்ற காரணம் காட்டுவது வடமொழி. அறிவி னால் அறியப்படும் சுட்டுப் பொருள்களெல்லாம் அசத் தென்பர் மெய்கண்டார்.

86. சத்துக்கும் அசத்துக்கும் உள்ள நுட்பமான வேற்றுமையின் அடிப்படை மெய்கண்டார் வாக்கிலே தான் காணப்படுகிறது.

87. அசித்துப் பொருளைச் சத்தென்றும் அசத் தென்றும் கூறுவதன் உட்கருத்தை மெய்கண்டார் வாக் கிலேதான் காணலாம்.

88. சித்தும் சத்துமாக விளங்குவதே சிவம் என் பதை வடமொழி சூத்திரம் விளக்கவில்லை.

89. சித்துக்கும் அசித்துக்கும் உள்ள வேறு பாட்டை மெய்கண்டார் வாக்கிற் காணலாம். வடமொழி சூத்திரத்தில் காண இயலாது.

90. சிவசமவாதம் சிவாத்துவிதம் முதலிய கொள்கைகட்கு வடமொழி சூத்திரம் இடந்தரும், மெய்கண்டார் வாக்கு இடம் தராது (85-90 காரணங்களை நன்கு தெளிதற்குப் பாடியம் பக்கம் 389-441 பன்முறை படிக்க வேண்டும்.)

91. அறிஞர் அறிகின்றனர் என்பதற்கும் இசைக்கு மன்னுலகே என்பதற்கும் உள்ள வேறுபாடு வெளிப்படை.

92. ஏழாம் சூத்திரம் "நாசிச்சித்ஸங்நிதௌகிந்து நவித்தஸ்தே உபேமித: ப்ரபஞ்ச சிவயோர் வேத்தா யஸ்ஸ ஆத்மாதயோ: ப்ருதக்" என்பது. இதன் நேர் மொழி பெயர்ப்பு-"அசித்து சித்தின் சந்நிதியில் இல்லை, ஏனெனில் அந்த இரண்டும் ஒன்றையொன்று அறிவதில்லை, பிரபஞ்சத்தையும் சிவத்தையும் அறிபவன் எவனோ அவன் அவ்விரண்டிற்கும் வேறான ஆன்மாவாம்" என்பது. மெய்கண்டார் திருவாக்கு "யாவையும் சூனியம் சத்தெதிராகலின் சத்தே அறியாத·சத்திலதறியாது இருதிறனறிவுளது இரண்டலா ஆன்மா" என்பது. அசத்து சத்தென்பர் மெய்கண்டார், அசித்து சித்து என்பது வடமொழி.

93. சத்தின் சந்நிதியில் அசத்து இன்மையால், அசத்தை சத்து அறியாதென்பது மெய்கண்டார் கூறுவது. அசித்தும் சித்தும், ஒன்றை ஒன்று அறியாமையால் சித்தின் சந்நிதியில் அசித்து இல்லை என்று காரிய காரண முறையைத் தலை கீழாக மாற்றிக் கூறுவது வடமொழி சூத்திரம்.

94. அசித்து சித்தை அறியாமைக்கும், சித்து அசித்தை அறியாமைக்கும் வடமொழி சூத்திரம் வெவ்வேறு காரணம் கூறவில்லை. அசத்து சத்தை அறியாமைக்கும், சத்து அசத்தை அறியாமைக்கும் மெய்கண்டார் வெவ்வேறு காரணம் கூறுகிறார்.

95. சிவாத்துவித சைவர் கொள்கையை மறுத்துச் சித்தாந்தம் சாதிப்பது மெய்கண்டார் திருவாக்கு. வடமொழி சூத்திரத்தில் இந்தத் தெளிவு இல்லை (பாடியம் 445-448).

96. இவ்விரண்டையும் அறிபவன் இவ்விரண்டிற்கும் வேறான ஆன்மா என்றே வடமொழி சூத்திரம் கூறுகின்றது. ஆன்மா இவ்விரண்டையும் அதற்குரிய காரணம், பலவாதிகளை மறுக்கும் துறையில் மூன்று வகையாகப் பொருள்படும்படி "இருதிறனறிவுளது" என்று மெய்கண்டாரால் கூறப்படுகிறது. (பாடியம் 452).

97. எட்டாம் சூத்திரம் "ஸ்தித்வாஸஹேந்த்ரியவ்யாதை: த்வாம் நவேத்ஸீதிபோதித: முக்த்வைதாந் குருணு நந்யோதந்ய: ப்ராப்நோதி தத்பதம்" என்பது. இதன் நேர் மொழிபெயர்ப்பு "இந்திரிய வேடர்களோடு கூடியிருத்தலால் உனது சொரூபத்தை அறிந்தாயில்லை" என்று குருவினால் தந்யன் போதிக்கப்பெற்றவனாய், இவ்விந்திரியங்களாகிய வேடர்களை விட்டுப்பிரிந்து அந்நியமில்லாதவனாய் அப்பதத்தை அடைகிறான்" என்பது. மெய்கண்டார் திருவாக்கு "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத் தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு அன்னிய மின்மையின் அரன் கழல் செலுமே" என்பது. வடமொழியில் "வேடர்களோடு கூடியிருத்தலால்" என்றுள்ளது, மெய்கண்டார் வாக்கில் "அயர்ந்தனை வளர்ந்து" என்பது பல நுட்பமான கருத்துக்களை அடக்கியுள்ளது.

98. இறைவனே குருவாக வருகின்றான் என்று மெய்கண்டார் கூறுகிறார், வடமொழி சூத்திரம் கூறவில்லை.

99. அவ்வாறு வருவதும் முன்பு செய்தவத்தினால் என்று மெய்கண்டார் கூறுகிறார், வடமொழி கூறவில்லை.

100. குருவின் பதத்தை அடைகிறான் என்பது வடமொழி, அரன் கழல் செலும் என்பது மெய்கண்டார் வாக்கு. (இறைவனே குருவாக வருவதை வடமொழி கூறவில்லை என்று மேலே 98ல் பார்த்தோம்).

101. ஒன்பதாம் சூத்திரம் "சித்ருசா ஆத்மநித்ருஷ்ட்வேசம்த்யக்த்வா ஆவ்ருதிமரீசிகாம் லப்த்வா சிவ பதச்சாயாம்த்யாயேத் பஞ்சாக்ஷரீம் ஸுதீ:" என்பது. இதன் நேர்மொழி பெயர்ப்பு "விவேகி, ஞான திருஷ்டியால் ஆன்மாவாகிய தன்னிடத்தில் ஈசனைக் கண்டு, கானல்நீர் போன்ற விருத்தியை விட்டு, சிவபதமாகிய நிழலைப் பெற்று, பஞ்சாக்ஷரத்தைத் தியானம் செய்யக் கடவன்" என்பது. மெய்கண்டார் திருவாக்கு "ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக்கண்ணினில் சிந்தை நாடி உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத் தண்நிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே" என்பது. மெய்கண்டார் வாக்கிலுள்ள "ஊனக்கண் பாசம் உணராப்பதியை" என்பது வடமொழியிலில்லை.

102. நாடுக என்ற முன்னிலை ஏவல் வடமொழியில்லை.

103. உராத்துனைத்தேர் என்பதிலுள்ள வேகக் குறிப்பும் வடமொழியிலில்லை.

104. பாசம் ஒருவ என்பர் மெய்கண்டார், விருத்தியை விட்டு என்னும் வடமொழி.

105. ஒருவுக என்ற முன்னிலை ஏவலும் வடமொழியிலில்லை. சாதன இயலில் இந்த ஏவல்கள் சாதனங்களைக் கூறுவதால் முக்கியமானவை.

106. தண் நிழல் என்பதிலுள்ள தண்மை வடமொழியிலில்லை.

107. பத்தாம் சூத்திரம் "சிவே நைக்கியம் கதஸ்ஸித்த: தததீந: ஸ்வவ்ருத்திக: மலமாயாத்ய ஸம்ஸ்ப்ருஷ்டோ பவதிஸ்வாநுபூதிமாந்" என்பது. இதன் நேர்மொழிபெயர்ப்பு "சித்தன் சிவத்தோடு ஐக்கியத்தை அடைந்தவனாய் அதன் வயமான தன் விருத்தியை உடையவனாய் மலம்மாயை முதலியவற்றால் பற்றப்படாதவனாய் சுவானுபூதிமானாக ஆகின்றான்" என்பது. மெய்கண்டார் திருவாக்கில் "அவனே தானே ஆகிய அந்நெறி, ஏகனாகி இறைபணி நிற்க, மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" என்பது. மெய்கண்டார் வாக்கில் சித்தன், சுவானுபூதிமான் என்ற சொற்களில்லை.

108. ஏகனாகி நிற்க, இறைபணி நிற்க என்ற ஏவல்களும், பணி என்ற கருத்தும் வடமொழியிலில்லை.

109. "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி" என்பதிலுள்ள பல நுட்பங்கள் வட மொழியில்லை.

110. "வல்வினை" என்பதன் பொருள்வளம் வடமொழியில்லை.

111. பதினோராம் சூத்திரம் "த்ருசோ தர்சயிதேவாத்மா தஸ்யதர்சயிதாசிவ: தஸ்மாத்தஸ்மிந் பாரம் பக்திம் குர்யாதாத்மோபகாரகே" என்பது. இதன் நேர்மொழி பெயர்ப்பு "ஆத்மா கண்களுக்கு அறிவிப்பது போல, அந்த ஆத்மாவிற்கு அறிவிப்பது சிவமாம், ஆத

லால் ஆத்மாவிற்கு உபகாரம் செய்கின்ற அச்சிவனிடத்து மேலான பக்தியைச் செய்தல் வேண்டும்" என்பது. மெய்கண்டார் திருவாக்கு "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின் அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்பது. இங்கே இறைவன் புரியும் காணும் உபகாரம் மெய்கண்டார் வாக்கிலுள்ளது, வட மொழியிலில்லை.

112. காட்டும் உளம் போல என்ற உவமையும் வட மொழியிலில்லை.

113. அயரா அன்பு என்பதிலுள்ள ஆழ்ந்த கருத்துக்கள் மேலான பக்தி என்பதிலில்லை.

114. அரன் கழல் செலுமே என்பர் மெய்கண்டார். வடமொழியில் இஃதில்லை.

115. பன்னிரண்டாம் சூத்திரம் "முக்தயைப்ராப்ய ஸதஸ்தோஷம் பஜேத்வேஷம் சிவாலயம் ஏவம்வித்யாச் சிவஜ்ஞாநபோதே சைவார்த்த நிர்ணயம்" என்பது. இதன் நேர் மொழிபெயர்ப்பு "முக்தியின் பொருட்டுச் சத்துக்களை அடைந்து அவர்கள் திருவேடத்தையும் சிவாலயத்தையும் பஜிப்பானுக. இவ்வாறு சிவஞான போதம் என்னும் இந்நூலில் சைவார்த்த நிர்ணயத்தை அறிக" என்பது. மெய்கண்டார் திருவாக்கு "செம்மலர் நோன்ருள் சேரலொட்டா, அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ, மாலறநேயம் மலிந்தவர் வேடமும், ஆலயம் தானும் அரன் எனத்தொழுமே" என்பது. "செம்மலர் நோன்ருள் சேரலொட்டா அம்மலம் கழீஇ" என்ற பகுதி வடமொழியிலில்லை.

116. "அன்பரொடு மரீஇ" என்பதிலுள்ள நுட்பம் "சத்துக்களை அடைந்து" என்பதிலில்லை.

117. மாலற நேயம் மலிந்தவர்" என்பதிலுள்ள கருத்துக்கள் வடமொழியிலில்லை.

118. "அரனென" என்ற முக்கியமான சொல் வட மொழியிலில்லை.

119. சீவன் முத்தர்களது அறிவு இச்சை தொழில்கள் வியாபரிக்கும் இடங்கள் இவை என்பதை மெய்கண்டார் நன்கு விளக்குகிறுர், வடமொழியில் இவ்விளக்கம் இல்லை.

120. இங்கே ஒரு வின இயல்பாக இறுதியில் எழும். மெய்கண்டார் திருவாக்கையே மூலமாகக் கொண்டு சிவாக்கிர யோகிகள் மொழி பெயர்த்தார் என்றே வைத்துக் கொண்டால், இவர் ஏன் இத்தனை மாறுபாடுகளைப் புகுத்தினர் என்று ஆராய்வது அவசிய மாகும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதன் முதலாக அறியவேண்டியது சிவாக்கிர யோகிகள் சித்தாந்த சைவர் அல்லரென்பது. அவர் சிவாத்துவித சைவம், சிவசம வாதம் முதலிய சில மாறுபட்ட கொள்கைகளை ஆதரிப்பவர் என்பதை, அவருடைய சிவஞான சித்தியார் உரை, சிவநெறிப் பிரகாசம் முதலியவற்ருல் அறியலாம். தமது கொள்கைக் கேற்ப மொழி பெயர்ப்பது இயல்பு. இரண்டாவதாக நாம் எண்ண வேண்டியது முப்பத்திரண்டெழுத்துக்களே உள்ள சூத்திரம் ஒவ்வொன்றில் மெய்கண்டார் நுட்பங்களை யெல்லாம் அடக்குவது இயலாது. கூடியவரையில் பொதுவாக மெய்கண்டார் கருத்தை அறிவிக்கும் வடமொழி சுலோகங்கள் (rough and ready translation) என்ற எண்ணங்கொண்டே மொழி பெயர்த்தார் என்று கொள்ளலாம்.

மேற் கூறிய 120 காரணங்களை முழுமையுமாவது, அவற்றில் முக்கியமான சிலவற்றையாவது ஆராய்வோர்,

நடுநிலையிலிருந்து சீர்தூக்கிப் பார்த்தால், மெய்கண்டார் திருவாக்காகிய சிவஞான போதம் தமிழ் முதல் நூலே தவிர மொழிபெயர்ப்பல்ல என்ற முடிவுக்கே வருவார்கள். இம்முடிபைத் தமிழ் மக்களும் சைவ மக்களும் நன்றாகக் கைக்கொள்ளுமாறு, ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற வழிகளில் எல்லாம் தொண்டு புரியுமாறு மெய்கண்டநாதன் புண்டரிகத் தாள் போற்றுவாம்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

பெருமன்றம் வெளியிட்டுள்ள அடக்கவிலை நூல்களின் விலைப்

1.	சிவாலய வழிபாட்டுப் பாடல் திரட்டு	2.50
2.	கூட்டு வழிபாட்டுப் பாமாலை	2.50
3.	கால காலர் திருமுறை	1.75
4.	பண்பயிற்சிப் பாடல் திரட்டு	2.00
5.	மழை வேண்டல் பதிகம்	1.25
6.	சிவலிங்க பூசை	1.00
7.	திருவொற்றியூர்த் தியாகராசர் திருக்கோயில்	3.00
8.	சிவபெருமான் திருமும்மணிக்கோவை உரையுடன்	5.00
9.	நால்வர் அம்மானை	1.00
10.	பெரு விண்ணப்பம்	0.25
11.	நீதிப் பாடற் கொத்து	0.50
12.	மகா மகப் பெருவிழா மலர்	7.00
13.	ஞானியார் அடிகள் நினைவு மலர்	15.00
14.	திருமுறைத் திருமணம் செய்முறை விளக்கத்துடன்	8.00
15.	மூன்றாம் திருமுறைத் திரட்டு	0.75
16.	சுந்தரர் தேவாரம் (ஏழாம் திருமுறை)	20.00
17.	திருப்புகழில் சைவ சித்தாந்தம்	1.00
18.	திரு வி.க வின் சிவஞான பாடிய அணிந்துரை	0.50
19.	சிவ ஞான போதம் – JMN ஆங்கில மொழிபெயர்ப்பு	1.00
20.	காய சித்தி	4.00
21.	முப்பொருள் இயல்பு	6.00
22.	சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்	50.00
23.	மெய் கண்ட சாத்திரங்கள் உரையுடன்	70.00
24.	சந்தானாச்சாரியர் வரலாறு	1.25
25.	துகளறு போதம்	20.00
26.	வள்ளலாரின் உத்தரஞான சிதம்பரம்	20.00
27.	சைவ சித்தாந்தமும் சமரச சுத்த சன்மார்க்கமும்	6.00
28.	வள்ளலார் கண்ட அருளாளர் அறுவர்	5.00
29.	சிவஞான மாபாடியம்	60.00
30.	சைவ சமயக் கையேடு	30.00
31.	சிவஞான போதம் தமிழ் முதல் நூலே	7.00

நூல்களைப் பெருமன்ற அலுவலகத்தில் நேரிலும் அஞ்சல் மூலமும் பெறலாம். அஞ்சல் மூலம் நூல்களைப் பெற விரும்பும் அன்பர்கள் நூல் விலையுடன் அஞ்சல் செலவையும் சேர்த்துப் பணத்தை அனுப்பினால் நூல்கள் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும். வி.பி.பி. மூலம் நூல்களை அனுப்ப இயலாது.